
# கற்பகம்

## தாயகத்தில் வளரும் தொழிற்சாலைகள்



சங்கானை
தெங்கு பனம்பொருள்
உ. வி. கூ. சங்கம்

பங்குனி—சித்திரை
1987

விலை ரூபா 2-50

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பகம்

பங்குனி-சித்திரை
1987
மலர் 8
இதழ் 3

வெளியீடு:
வடமாகாண
தெ.ப பொ. கூட்டுறவு
சங்கங்களின் சமாஜம்
330, கே.கே.எஸ் வீதி
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22713

ஆசிரியர்
கே வி நடராஜன்

அட்டைப்படவிளக்கம்
பக்கம்: 24

வடிவமைப்பும்
அச்சீடும்
ஸ்வர்ணம் பப்ளிசிடீஸ்
125 A, ஸ்ரேசன் வீதி
யாழ்ப்பாணம்

# 1987 திட்டத்தின் பிரதான அம்சம் புறக்கணிப்பு?

தமிழர் தம் தேசியச் சொத்தாகிய பனை வளத்தை பூரணமாகப் பயன்படுத்தும் நோக்கில் புதிய எண்ணக் கருக்கள் "1987ம் ஆண்டுக்கான அபிவிருத்தித் திட்டம்" என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்பட்டன.

பல்வேறு எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் கடந்த மாசி மாதம் முதலாம் திகதி முதல் தெ.ப.பொ. உற்பத்தி விற்பனவுச் சங்கங்களால் நடைமுறைப்படுத்தப்படும் இத்திட்டத்தின் பலாபலன்களை, இலாப நட்டங்களை மதிப்பீடு செய்ய வேண்டிய காலகட்டத்தில் நாம் இன்று இருக்கின்றோம்.

இத்திட்டத்தின் பிரதான நோக்கம் பனையின் பயன்பாடுகள் 'பெரும்குடி' மக்களுக்கு மட்டும் பயனபடுவனவாக இல்லாது சகல தரத்தினருக்கும், சகல வயதினருக்கும் பயன்படுவனவாக மாற்றப்பட வேண்டும் என்பதேயாகும். இதனை விளங்கியும் விளங்காதவர்களாக தொடர்ந்தும் கள் உற்பத்தி விற்பனை, லோவைன் என்னும் செறிவு குறைந்த மதுசார உற்பத்தி ஆகியவற்றில் மட்டும் கவனம் செலுத்தும் பழைய பாணியிலேயே மட்டும் சங்கங்கள் இயங்கி வருகின்றன; இயக்கப்படுகின்றன.

தொழிலாளர் அங்கத்தவர்களும் ஆரம்பத்தில் 'விலையை அதிகரி' 'லீற்றர் முறை வேண்டாம்' என்ற கோஷங்களைப் போட்டு அப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்ட பின் எதிர் கால சிந்தனையின்றி அடங்கிவிட்டனர். அபிவிருத்தித் திட்டம் பெற்றிக் அலகு முறையை அமுல்படுத்தவும், ஒரே சீரான விலையை நிர்ணயிக்கவும் மட்டும் கொண்டுவரப்பட்டது போன்ற மனப்பிரேமையில காலத்தை ஓட்டுகிறார்கள்.

திட்டத்தின் உண்மையான சத்துப் பொருளாகிய பதனீர் உற்பத்தி மறக்கப்பட்ட ஒன்றாகிவிட்டதோ என்று எண்ணும் அளவிற்கு சங்கங்களின் நிர்வாகமும், முகாமையும் அலட்சியமாக நடந்து வருகின்றன. ஓகோ என்று கொடிகட்டிப் பறந்த சங்கங்கள் எல்லாம் சமூகத்திற்கு, இனத்திற்கு

நன்மை பயக்கும் திட்டத்தை நடைமுறைக் கிட தயங்கி நிற்கின்றன. நட்டமடைந்து விடுமோ என அச்சமடைகின்றன. ஆனால் நட்டத்தை ஈடு செய்ய "அபிவிருத்தி நிதி ஒதுக்கீடு" ஏற்படுத்தப்பட்டுள்ளதை மறந்து விடுகின்றன. அபிவிருத்தி நிதி ஒதுக்கீட்டுக் காகத்தான் பனங்கள்ளின் விற்பனை விலை அதிகரிக்கப்பட்டு, இடைவெளி அதிகரிக்கப் பட்டதே அன்றி பாவனையாளரைச் சுரண்டி அபரிமித லாபம் பெற்று, இரண்டாந் தடவைப் பணம் வழங்கவல்ல என்பதை சங்க நிர்வாகம் மறந்து விட்டது வருந்தத்தக்கது.

அபிவிருத்தித்திட்டத்தை அமுல் நடாத்துவதில் நலிந்த சங்கங்கள் காட்டிய ஆர்வத்தையும் அதனால் தொழிலாளர்களுக்கும் இனத்திற்கும் ஏற்பட்ட நன்மைகளையும் சுட்டிக்காட்டாது விட முடியாது. கட்டைவேலி உடுப்பிட்டிச்சங்கம் விலை அளவு ஆகியவற்றில் பிரச்சினை இன்றித் திட்டத்தை அமுல் படுத்தியது.

கொடிகாமம் சங்கம் கட்டைவேலி சங்கத்தையும் விட ஒருபடி மேலே போய் பாணி உற்பத்தி, பனைவெல்ல உற்பத்தி ஆகியவற்றில் ஈடுபட்டு திட்டத்தின் அம்சங்களை முழுமைப் படுத்தியுள்ளது. திட்டம் உருவாக்கப் பட்ட நோக்கத்தை நிறைவு செய்தது. இதற்காக அச்சங்கத்தையும், அதன் தலைவரையும், நிர்வாகத்தையும் பாராட்ட வேண்டும்

சாவகச்சேரி, பளை ஆகிய சங்கங்களும் பதனீர், பாணி, பனைவெல்லம், சீனி உற்பத்திகளில் ஈடுபட்டுள்ளன. மற்றைய சங்கங்களும் சகல தமிழர்களுக்கும் பயன்படக் கூடிய உற்பத்திப் பொருட்களாகிய பதனீர், பாணி, பனை வெல்லம், பனங்கற்கண்டு ஆகியவற்றின் உற்பத்தியில் உடன் ஈடுபட வேண்டும். இதற்கு முதிர்ந்த அனுபவமுள்ள தலைவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எமது மூலவளத்தை மதுப்பிரியர்களுக்கு மட்டுமல்லாது, எமதுமக்கள் அனைவரதும் நன்மைக்காக பயன்படுத்த முன்வர வேண்டும். நெருக்கடியான இக் காலகட்டத்தில் இனத்தின் சுய தேவையைப் பூர்த்தி செய்ய முன்வர வேண்டும்.

தடைகளை உடைத்தெறிய உறுதியுடன் செயற்படுவோம். ஒளிமயமான எதிர்காலத்திற்கு, பொருளாதார சுபீட்சத்திற்கு அசையாத அடிக்கல் நாட்டுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1987 திட்டத்தின் பிரதான அம்சம் புறக்கணிப்பு?

தமிழர் தம் தேசியச் சொத்தாகிய பனை வளத்தை பூரணமாகப் பயன்படுத்தும் நோக்கில் புதிய எண்ணக் கருக்கள் "1987ம் ஆண்டுக்கான அபிவிருத்தித் திட்டம்" என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்பட்டன.

பல்வேறு எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் கடந்த மாசி மாதம் முதலாம் திகதி முதல் தெ.ப.பொ. உற்பத்தி விற்பனவுச் சங்கங்களால் நடைமுறைப்படுத்தப்படும் இத்திட்டத்தின் பலாபலன்களை, இலாப நட்டங்களை மதிப்பீடு செய்ய வேண்டிய காலகட்டத்தில் நாம் இன்று இருக்கின்றோம்.

இத்திட்டத்தின் பிரதான நோக்கம் பனையின் பயன்பாடுகள் 'பெருங்குடி' மக்களுக்கு மட்டும் பயனபடுவனவாக இல்லாது சகல தரத்தினருக்கும், சகல வயதினருக்கும் பயன்படுவனவாக மாற்றப்பட வேண்டும் என்பதேயாகும். இதனை விளங்கியும் விளங்காதவர்களாக தொடர்ந்தும் கள் உற்பத்தி விற்பனை, லோவைன் என்னும் செறிவு குறைந்த மதுசார உற்பத்தி ஆகியவற்றில் மட்டும் கவனம் செலுத்தும் பழைய பாணியிலேயே மட்டும் சங்கங்கள் இயங்கி வருகின்றன; இயக்கப்படுகின்றன.

தொழிலாள அங்கத்தவர்களும் ஆரம்பத்தில் 'விலையை அதிகரி' 'லீற்றர் முறை வேண்டாம்' என்ற கோஷங்களைப் போட்டு அப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்ட பின் எதிர்கால சிந்தனையின்றி அடங்கிவிட்டனர். அபிவிருத்தித் திட்டம் மெற்றிக் அலகு முறையை அமுல்படுத்தவும், ஒரே சீரான விலையை நிர்ணயிக்கவும் மட்டும் கொண்டுவரப்பட்டது போன்ற மனப்பிரேமையில காலத்தை ஓட்டுகிறார்கள்.

திட்டத்தின் உண்மையான சத்துப் பொருளாகிய பதனீர் உற்பத்தி மறக்கப்பட்ட ஒன்றாகிவிட்டதோ என்று எண்ணும் அளவிற்கு சங்கங்களின் நிர்வாகமும், முகாமையும் அலட்சியமாக நடந்து வருகின்றன. ஓகோ என்று கொடிகட்டிப் பறந்த சங்கங்கள் எல்லாம் சமூகத்திற்கு, இனத்திற்கு


கற்பகம்

பங்குனி-சித்திரை
1987
மலர் 8
இதழ் 3

வெளியீடு:
வடமாகாண
தெ.ப பொ. கூட்டுறவு
சங்கங்களின் சமாஜம்
330, கே.கே.எஸ் வீதி
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22713

ஆசிரியர்
கே வி நடராஜன்


அட்டைப்படவிளக்கம்
பக்கம்: 24


வடிவமைப்பும்
அச்சீடும்
ஸ்வர்ணம் பப்ளிசிடீஸ்
125 A, ஸ்ரேசன் வீதி
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மை பயக்கும் திட்டத்தை நடைமுறைக்கிட தயங்கி நிற்கின்றன. நட்டமடைந்து விடுமோ என அச்சமடைகின்றன. ஆனால் நட்டத்தை ஈடு செய்ய "அபிவிருத்தி நிதி ஒதுக்கீடு" ஏற்படுத்தப்பட்டுள்ளதை மறந்து விடுகின்றன. அபிவிருத்தி நிதி ஒதுக்கீட்டுக்காகத்தான் பனங்கள்ளின் விற்பனை விலை அதிகரிக்கப்பட்டு, இடைவெளி அதிகரிக்கப்பட்டதே அன்றி பாவனையாளரைச் சுரண்டி அபரிமித லாபம் பெற்று, இரண்டாந் தடவைப் பணம் வழங்கவல்ல என்பதை சங்க நிர்வாகம் மறந்து விட்டது வருந்தத்தக்கது.

அபிவிருத்தித்திட்டத்தை அமுல் நடாத்துவதில் நலிந்த சங்கங்கள் காட்டிய ஆர்வத்தையும் அதனால் தொழிலாளர்களுக்கும் இனத்திற்கும் ஏற்பட்ட நன்மைகளையும் சுட்டிக்காட்டாது விட முடியாது. கட்டைவேலி உடுப்பிட்டிச்சங்கம் விலை அளவு ஆகியவற்றில் பிரச்சினை இன்றித் திட்டத்தை அமுல் படுத்தியது.

கொடிகாமம் சங்கம் கட்டைவேலி சங்கத்தையும் விட ஒருபடி மேலே போய் பாணி உற்பத்தி, பனைவெல்ல உற்பத்தி ஆகியவற்றில் ஈடுபட்டு திட்டத்தின் அம்சங்களை முழுமைப் படுத்தியுள்ளது. திட்டம் உருவாக்கப்பட்ட நோக்கத்தை நிறைவு செய்தது. இதற்காக அச்சங்கத்தையும், அதன் தலைவரையும், நிர்வாகத்தையும் பாராட்ட வேண்டும்

சாவகச்சேரி, பளை ஆகிய சங்கங்களும் பதனீர், பாணி, பனைவெல்லம், சீனி உற்பத்திகளில் ஈடுபட்டுள்ளன. மற்றைய சங்கங்களும் சகல தமிழர்களுக்கும் பயன்படக்கூடிய உற்பத்திப் பொருட்களாகிய பதனீர், பாணி, பனை வெல்லம், பனங்கற்கண்டு ஆகியவற்றின் உற்பத்தியில் உடன் ஈடுபட வேண்டும். இதற்கு முதிர்ந்த அனுபவமுள்ள தலைவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எமது மூலவளத்தை மதுப்பிரியர்களுக்கு மட்டுமல்லாது, எமதுமக்கள் அனைவரதும் நன்மைக்காக பயன்படுத்த முன்வர வேண்டும். நெருக்கடியான இக் காலகட்டத்தில் இனத்தின் சுய தேவையைப் பூர்த்தி செய்ய முன்வர வேண்டும்.

தடைகளை உடைத்தெறிய உறுதியுடன் செயற்படுவோம். ஒளிமயமான எதிர்காலத்திற்கு, பொருளாதார சுபீட்சத்திற்கு அசையாத அடிக்கல் நாட்டுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலவர காலத்தில் கைகொடுக்கும் கூட்டுறவு முறை

19-ம் நூற்றுண்டின் முதல் பகுதியில் நிகழ்ந்த நெருக்கடிகள் காரணமாக ஐரோப்பிய நாடுகள் எங்கும் 1848 - ம் ஆண்டு கலவர ஆண்டாக நிலவியது. அக்காலத்தில் ஜெர்மனியில் உண்டான பஞ்சம் பட்டினியை ஓரளவுக்கு நீக்கக் கருதிய உத்தமர் முப்பதுவயதான ரைபீசன் பிரடறிக் வில்சன் என்பவராவர். சில பணக்காரரின் உதவி பெற்று ஏழைகளுக்கு உணவு கொடுக்க முயன்ற ரைபீசன் தானியங்கள் உருளைக்கிழங்கு, ரொட்டி ஆகியவற்றை மொத்தமாகவாங்கி ஏழைகளுக்கு நியாயமான விலைக்குக் கொடுத்தார்.

ஏழைக் கமக்காரன் நிலையை உயர்த்த முயன்ற ரைபீசன் 1850 - ம் ஆண்டில் கால்நடைகளை நியாயமான விலைக்கு விற்றூர். பின்னர் 1853 - ம் ஆண்டில் குறைந்த வட்டிக்குக் கடன் வாங்கினூர். கிராமோதயத்தின் பொருட்டு உத்தரவாதம் வரையறுக்கப்படாத கூட்டுறவுச் சங்கங்களை நிறுவினூர். கிராமத்தவர், ஏழைகள் அங்கத்தவராய்ச் சேர்ந்து நன்மையடைந்தார்கள். ரைபீசன் முறையில் கண்ட நன்மைகள். பல.

1 அங்கத்தவரான பங்குதாரர் ஒருவருக்கொருவர் அறிமுகமானவராய் உதவி செய்யக் கூடியவராய் இருந்தனர். அதற்காக விவகார எல்லை சிறிதாக அமைந்தது. அங்கத்தவர் தொகை 2000 வரை இருந்தது.

**இந்த இயக்கம் தனி மனிதரின் பொருளாதார நலன்களை மட்டுமல்லாது குணநலன்களையும் மேமபடுத்தும். இலாப நோக்கேயின்றிச் செயற்படவேண்டிய ரைபீசன முறை எமது இன்றைய தேவை!**

2 ஏழைகளும் அங்கத்தவராதற் பொருட்டு பங்குத் தொகை மிகக் குறைவாக இருந்தது. (ரைபீசனின் கொள்கை ஏழைகள் பங்குத் தொகை கட்டாமலே அங்கத்தவராகலாம் என்பதே).

3 வளர்ந்து கொண்டு போகும் சேம நிதியை உடையதால் சேம நிதியைப் பிரித்துக் கொடாது வளர்த்தல்.

4 உத்தரவாதம் வரையறுக்கப் படாத அங்கத்தவரை உடையதாதல்.

5 உபயோகிக்கக் கூடிய பொருள்களை உண்டாக்கிக் கொள்வதற்கும் பிற இன்றியமையாத நற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரியங்களுக்குமே பங்குக்காரருக்குக் கூட்ட கொடுத்தல் வேண்டும்.

6 நீடித்த காலஎல்லையில் கடன் கொடுத்து அதனைச் சிறு சிறு தொகையாக திருப்பி வாங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

7 கடன் பெறும் தொகையின் அளவையும் சேமித்து வைக்கும் தொகையின் அளவையும் அங்கத்தவரே தீர்மானிக்க வேண்டும்.

8 இலாபம் என்பதையே கருதாமல் இருத்தல் வேண்டும். ஆதாயப் பணம் பங்கிடப்படும் போது அது சாதாரண வட்டித் தொகைக்கு மேற்படக் கூடாது.

9 நிர்வாக அங்கத்தவர் சம்பளம் பெறுமல் கடமை ஆற்றுதல் நல்லது. அவசியமானுல் காரியதரிசிக்குப் படி வழங்கலாம் என இருத்தல்.

10 அங்கத்தவருக்கு வேண்டியவற்றை வாங்கிக் கொடுத்துதவ நன்னடத்தையையும் வளர்த்தல்.

இவ்வாறான ரைபீசன் 1888-ம் ஆண்டு 463 கூட்டுறவுச் சங்கங்களைக் கண்டு மகிழ்ந்தார். இருபதாம் நூற்றுண்டின் ஆரம்பகாலத்தில் ஜெர்மனியில் 14,000 கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன.

ரைபீசன் முறையில் அமைந்த இன்னொரு அம்சம் பங்காளர் சிறு தொகைகளையும் முதலீடு செய்து சேமிக்கலாம் என்பதாகும். அவர்கள் உண்டியல் பெட்டிகளில் சேமித்து முதலீடு செய்து வட்டி பெற வாய்ப்பிருந்தது. அங்கே கூட்டுறவு வங்கிகளும் வளர்ச்சியுடைந்தன.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதில் எத்தனையோ கருத்துக்கள் இருக்கின்றன.

தனிப்பட்டவராய் வாழும் மக்களுக்கு உண்டாகும் சிக்கல்களை நீக்குவதற்கு எழுந்த இயக்கங்கள் எல்லாவற்றிலும் கூட்டுறவு இயக்கமே தலை சிறந்தது. அது நல்லொழுக்கத்தையும் பொருளாதார மேம்பாட்டையும் உண்டாக்குவது.

**மாக்லகன் அறிக்கை:**

கூட்டுறவைப் பற்றி மாக்லகன் குழுவினர் செய்த பரிசீலனையின் அறிக்கை அதன் நன்மைகளைக் கூறுகின்றது. தனிப்பட்ட சக்தியற்ற பலர் ஒன்று சேர்ந்து ஒருவருக்கொருவர் உதவி செய்து கொண்டு பொருள் நலன்களைப் பெறுவதல்லாமல் குணநலன்களையும் தமது சக்தியையும் அதிகரித்துக் கொள்ள வாய்ப்பு உண்டு. பலர் ஒன்று சேர்ந்த பலத்தினுல் தன்னம்பிக்கை வலுப்படுகின்றது. பலரின் கூட்டுறவால் ஒவ்வொருவருடைய குணநலன்களும் மேன்மைப்பட்டு எல்லோரும் வாழ்க்கை நலத்தை அடையச் சாதனமென்று கிடைக்கிறது. இதனுல் சிறந்த வாழ்க்கை நடாத்த முடிகிறது. கூட்டுறவு சுதந்திரமான, தன்விருப்பார்ந்த ஜனநாயக அமைப்பாகும். சுய உதவி, பரஸ்பர உதவி ஒருவர் எல்லோருக்கும் உதவி, எல்லோரும் ஒருவருக்கு உதவி என்பன வளரும் கூட்டுறவில் ஒற்றுமை, சமத்துவம், நேர்மை, உறுதி, உழைப்பு, முயற்சி, உதவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரோபகார சிந்தனை என்பன இருக்கும்.

கூட்டுறவில் இலாபத்திலும் பார்க்க நலனே பிரதானம். இலாபத்தில் எல்லோருக்கும் பங்குண்டு. நலனில் எல்லோருக்கும் புகழுண்டு. பெருமையுண்டு. அங்கத்தவரின் நலனைப் பாதுகாப்பதற்கு நலன்புரிச் சங்கமோ தொழிற் சங்கமோ கூட்டுறவுத் துறையில் தேவையில்லை. பணக்காரர் தம் பணத்தை முதலீடு செய்வதற்குக் கூட்டுறவு இயக்கத்தை விட வேறு நிலையம் பெருமை தராது. கூட்டுறவால் உண்டாகும் நன்மைகள் பல. அங்கத்தவருக்கு ஜனநாயக முறையில் தேர்ச்சியும் அனுபவமும் உண்டாகின்றன. சகோதரத்துவ மனப்பான்மை வளருகிறது. பரஸ்பர நம்பிக்கை, தன்னம்பிக்கை, ஒத்துழைப்பு, தன்மதிப்பு என்பன மேலோங்குகின்றன. வீண் செலவைக் குறைக்கவும், பொருளாதார முன்னேற்றத்தை அடையவும் வழி தருகின்றது.

ஆங்கிலப் புலவரான றஸ்கின் 'உலகின் எல்லோரது மேம்பாடு' என்ற நூலை எழுதி மகாத்மா காந்தியை உருவாக்கியவர். அவர் கூட்டுறவைப் பற்றி இவ்வாறு கூறியுள்ளார். 'கூட்டுறவு வாழ்க்கையின் நியதி. அது மனித சமுதாயத்தை அழியாமல் காக்கிறது.'

முதலாளித்துவத்தில் தனிச் சொத்துரிமை, தனி முயற்சி, தனி இலாபம் இருப்பதால் அங்கே முதலும் தொழிலும் போட்டி போடு

(6-ம் பக்கம் பார்க்க)

## கண்ணீர் சிந்தும் பாறைகள்

சோவியத்தின் வடகிழக்கு சைபீரியாவின் யாகுத்ஸ்க் பிரதேசத்தில், லேனா நதியின் வலது கரையோரம் 200 கிலோமீற்றர் நெடுகிலும் உயரமான செங்குத்துப் பாறைகள் அமைந்துள்ளன. இப்பாறைகளின் கரடுமுரடான மேற்பரப்பிலிருந்து கண்ணீர் போன்று நீர்த்தாரைகள் வடிகின்றன. இதனால் இப்பாறைகள் கண்ணீர்வடிக்கும் பாறைகள் அல்லது நீர்த்தாரைப் பாறைகள் என்றழைக்கப்படுகின்றன.

இந்த அதிசயக் கண்ணீர்ப் பாறைகள் பற்றிய ஆய்வில் ஈடுபட்ட சோவியத் விஞ்ஞானிகள் இதன் உண்மையைக் கண்டறிந்துள்ளனர். இச் செங்குத்துப் பாறைகளில் தடிப்பான அடுக்குகளாகப் பாசி படர்ந்துள்ளன என்றும் இப்பாறைகள் அமைந்த பிரதேசம் மிகஅதிகமான வெப்ப நிலையில்; வெளிமண்டலத்தில் ஒரு கனமீற்றருக்கு பத்து கிராம் அளவு ஈரப்பதனைக் கொண்டிருக்கின்றது. இங்குள்ள வெப்பக் காற்று இந்தப் பனிமூடிய, பாசி படர்ந்த பாறைகள் மீது படுவதால் பாறையிலுள்ள ஈரப்பதன் குளிரடைந்து நீர்த்துளிகளை ஏற்படுத்துகின்றன. நீர்த்துளிகள் ஒருங்கிணைந்து நீர்த்தாரைகளை உருவாக்குகின்றன.

—'சோவியத் தகவல்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி கற்கும் முறை

"அறிவு வளர்ச்சிக்கு ஒரே ஒரு முறைதான் உண்டு. அது தான் மனதை ஒரு முகப்படுத்தல் என்பது.

கல்வியின் அடிப்படையான இலட்சியமே மனதை ஒரு முகப்படுத்துவதுதான். ஆய்வு கூடத்தில் ஆய்வை நடத்தும் இரசாயன அறிஞன் தன் மனோ சக்தி முழுவதையும் ஒரு முகப்படுத்தி இயற்கைப் பொருளின் மேற் செலுத்துகின்றான். அப்போது அவனுக்கு இப்பொருளின் உண்மைத் தன்மை புலனாகி அறிவுண்டாகிறது.

வானியல் அறிஞன் தன் மனோ சக்தியை ஒரு முகப்படுத்தி தொலை நோக்கியின் மூலம் தான் ஆராய விரும்பும் கோள்களின் மீது செலுத்துகின்றான் அப்போது விண்மீன்களும் சூரிய மண்டலங்களும் முன் வந்து அவனுக்குத் தம இரகசியங்களை வெளிப்படுத்துகின்றன.

மனத்தை ஒரு முகப்படுத்தும் அளவிற்கும் சாமானிய மனிதன் தன் மனோசக்தியில நூறறுக்குத் தொண்ணூறு வீதத்தை வீண செய்கின்றான். பண்புடைய மனதைப் பெற்றவன் தவறு செய்யான். ஒருவனுக்கும் மற்றவனுக்குமுள்ள வித்தியாசம் அவனிடத்தில் உள்ள மனதை ஒரு முகப்படுத்தும் சக்தியைப் பொறுத்துத் தான் இருக்கிறது. மிகத்தாழ்ந்த மனிதனை மிக உயர்ந்த மனிதனுடன் ஒப்பிட்டுப் பாருங்கள் அவர்களில் வித்தியாசம் உள்ளது. எத்துறையிலும் வெற்றி பெறுவது இதைப் பொறுத்ததாகத் தான் இருக்கிறது. இசை, ஓவியம், சிற்பம் முதலிய எல்லாக் கலைகளிலும் உயர்ந்த தேர்ச்சி பெறச் செய்வது மன ஒற்றுமை தான்.

"மன ஒற்றுமையின் சக்தியே அறிவுக் களஞ்சியத்தின் திறவு

அ. யே. யூலியஸ் விநோதன்

கோல். கல்வியின் இலட்சியம் விடயங்களைப் பற்றிய ஞானத்தை சேகரம் செய்வதன்று. மன ஒற்றுமையே கல்வியின் அடிப்படை இலட்சியம் என்பது எனது முடிவு. நான் மறுபடியும் கல்வி கற்பதாக இருந்தால் விடயங்களைப் பற்றி படிக்கவே மாட்டேன். மன ஒருமையையும் மனதை எந்த இடத்திற்கும் எக்கணத்திலும் செலுத்தும் சக்தியையும் அபிவிருத்தி செய்வேன். பின்பு அவ்வுயர்ந்த சக்தி ஆகிய ஆயுதத்தைக் கொண்டு நான் விரும்பிய விடயங்களை எளிதில் அறிந்து கொள்வேன்" என்று சுவாமி விவேகானந்தர் ஒரு முறை குறிப்பிட்டுள்ளார்.

## கலவர காலத்தில்

கின்றன. கூட்டுறவில் முதலும் தொழிலும் சொந்தம் கொண்டாடுகின்றன. முதலாளித்துவ முறையில் இலாபத்துக்காகப் பொருள்கள் செய்யப்படுகின்றன. ஆனால் கூட்டுறவு முறையில் உபயோகத்துக்காகவே பொருள்கள் செய்யப்படுகின்றன.

கூட்டுறவால் இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, சுவீடன், டென்மார்க், நோர்வே, சுவிற்சலாந்து, அமெரிக்கா, சீன, இந்தியா முதலிய நாடுகள் சிறந்த முன்னேற்றமடைந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமுகம் உடைகிறது

'அவனில்' தொடங்கிய 'ஒரு சாதி' அவல வாழ்வும் வாழ்க்கையும் இன்று சுவரில் வந்து முற்றுப் பெற்று நிகழ்கின்றது என்றால், இந்த சமூக வாழ்வில் அந்த 'அவன்' இன்றைய அவராவதற்கு எத்தனை மேம்பாடான நெறியுள்ள வாழ்க்கையை வாழ்ந்து அந்த மரியாதைப் பண்புச் சொல்லை சம்பாதித்திருக்க வேண்டும்!

சிறுகதை

ஆம், வேலப்பாவைப்பற்றித்தான் கிட்டிணுத் தம்பி இப்படி நினைக்கிறான்.

இன்று எல்லோருக்கும் வேலப்பா ஆகிவிட்டிருக்கும் இந்த வேலப்பாவின் எஞ்சியுள்ள வாழ் நாட்களில் இனி அவருடைய பெயருக்கு முன்னாலோ பின்னாலோ ஏற்ற வேண்டிய மரியாதை மெருகு எதுவும் இருப்பதாக கிட்டிணுவுக்குத் தோன்றவில்லை.

வாலிபத்திலிருந்து வயது நாற்பதாகிற வரையிலும் வேலன் ஆகவும், பின்னால் வந்த ஒரு தசாப்த கால கட்ட முதிர்ச்சியில் 'ர்' சேர்ந்து 'வேலர்' ஆகியும், பின்னும் சில வருஷங்களின் காலப் போக்கில் 'லு' சேர்ந்து வேலு ஆகி, பின்னும் பிழைத்திருந்து வாழ்ந்திருப்பதால் வேலப்பா ஆகவும் ஆகி விட்ட இந்த வேலப்பா சொன்ன சிலசங்கதிகளில் மனதை மேய விட்டு, அவற்றையும், அவரையும் அளந்து ஆராய்ந்த வண்ணம் இன்னமும் போர்வைக்குள் சுருண்டே படுத்துக் கிடக்கிறான் கிட்டுணுத்தம்பி.

ஒருபுறம் விடியாத அந்தப் பின்னிரவின் பனிமூட்டமிட்ட அவ் வேளையில் ஆரால்தான் போர்வையைத் தூக்கி எறிந்து விட்டு படுக்கையை விட்டு எழுந்திருக்க மனம் வரும்; வேலப்பாவைத் தவிர? வேலப்பாவுக்கு விடிந்து விட்டதாம். வேலப்பாவுக்கு விடிந்து விட்டதென்றால் கிட்டிணுவுக்கும் அவன் போன்ற இன்றைய இளைஞர்களுக்கும் விடிந்தாகி விடுமா என்ன!

காகம் குருவி கூட கரைந்து காலையை வரவேற்கத் துணியாத அவ்வேளையில் வேலப்பா வீட்டினுள் போர்வையை இழுத்து இழுத்து எழுப்புகிறார்.

வேலப்பாவின் அரிகண்டத்தில் கிட்டிணுவுக்கு விழிப்பு கண்டு விட்ட

கே. வி. நடராஜன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னவோ உண்மையே. ஆனாலும் அவன் குளிரின் பயத்தில் கைகாலையோ, முகத்தையோ வெளியே தெரிவிக்காத அந்த மொட்டாக்குப் போர்வையை அகற்ருமலே சிணுங்கிச் சிணுங்கி குரல் கொடுக்கிருன். இந்த வேலப்பாவும் அவனை விடுவதாயில்லை. ஒரு செல்லமான நாய்க்குட்டியின் செயல்களுடன் அது தன் எஜமானனுடன் விளையாடும் பாங்கில் அவன் போர்வையை இழுத்திழுத்து விடாது தொந்தரவு கொடுத்த வண்ணமே இருக்கிருன்.

இந்த வேலப்பாவின் மேல் எவ்வளவோ மதிப்பும், மரியாதையும், பிரியமும் வைத்திருக்கும் கிட்டிணுத் தம்பியின் திருந்திய முழுப் பெயர் கிருஷ்ணபிள்ளை என்பதாகும். மேல் குலப் பிறப்பாகிய இந்த கிட்டிணுத்தம்பியை வேலப்பாவும் அவனின் மக்களும் தாங்கள் அறிந்த மரியாதைக்குரிய பாஷையில் 'கிட்டுணுத் தம்பி, கிட்டுணுத் தம்பி' என்று அழைக்கிருர்கள். இந்த மக்களுடன் கிட்டிணுத் தம்பியின் சகோதரத்துவத்துடன் கூடிய கட்டிப் புரண்டு தழுவிப் பழகும் பாங்கும் அவனின் குல கோத்திரத்துக்குள் ஒரு பெரிய விரிசலையே ஏற்படுத்தி வைத்திருக்கிறது. 'குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்பு' என்று அவர்கள் இவனைச் சொல்வது இவனுக்கு செவிடன் காதில் ஊதப்பட்ட சங்காகி ரொம்ப நாளாகி விட்டது.

'மெத்தக் கற்றுணர்ந்த பிள்ளை' என்பது வேலப்பாவினதும் அவரின் மக்களினதும் கிட்டிணுத்தம்பியைப்பற்றிய தீர்மானமும் புகழ்மாலையும் பாராட்டுதலுமாகும். 'என்னத்தைப் படித்து என்ன? எல்லாம் தெரிந்த பல்லி கடைசியிலை கூழ்ப்பானையுக்கை விழுந்த மாதிரி நளம் பள்ளுகளோடை கைகோத்துக் கொண்டு திரியத்தானே அவன்ரை படிப்பு உதவியிருக்கு' என்பது கிட்டிணுவின் குல கோத்திரத்தில் அவனைப் பற்றிய வக்கிரப் பேச்சுகள்.

உண்மையாகவே மெத்தப் படித்தவனாகிய இந்தக் கிட்டிணுவைப் பற்றி அவன் உறவுக்காரர்களுக்கு இன்னொரு குறையும் உண்டு. இவ்வளவு பெரிய படிப்பு படிச்சிட்டுப் போய் நிலத்தைக் கிண்டிறானே! அரசாங்க உத்தியோகத்தில இருந்து ஆயிரக் கணக்கில சம்பளத்தை வாங்கிக் கொண்டு... உவனைர படிப்புக்கு இலட்சக் கணக்கில சீதனத்தைக் குடுத்து இருஞ்சிக் கொண்டு போறதுக்கு எத்தினை பேர் இருக்கிருர்கள்...... கால் மேல் கால் போட்டுக் கொண்டு இராசாமாதிரி காரிலை திரியிறத்துக்கு குடுத்து வைக்கவில்லை என்பதுமே.

இவர்கள் சொன்ன இந்த விஷயங்கள் கிட்டிணுத்தம்பிக்கு எந்தக் கஷ்டமும் இல்லாமல் கிடைத்திருக்கும் என்பது முற்றிலும் உண்மையே. ஆயினும் கிட்டிணு என்னவோ தன் சொந்த நிலத்தில் — தனது அறிவுபூர்வமான சுயசிந்தனையுடனேயே இந்த முடிவுக்கு வந்து — ஒரு தோட்டக்காரனாகவே தன்னை ஆக்கிக் கொண்டு விட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டச் செய்கைத் துணைக்கு தனது உதவியாளனாக — அத் துறையில் தேர்ந்த அனுபவசாலியும், அயராத உழைப்பாளியுமாகிய வேலப்பாவைத் துணைக்கு வைத்துக் கொண்டிருக்கிறான். பத்து இருபதுக்கு மேல் இளைஞர்களான பலர் அவனது தோட்ட வேலையாட்களாக இருந்த போதிலும் வேலப்பாவின் துணையொன்றே அவனை இத் துறையில் மேன் மேலும் ஊக்கமடையச் செய்ததாகவே கிட்டிணு உள்ளார்த்தமாக நினைப்பது மட்டுமல்லாமல் வாய்விட்டு பலரிடம் சொல்வதுமுண்டு.

இத்தனைக்கும் பழைய முறையில் பயிர் செய்து பழக்கப்பட்ட வேலப்பா இன்றும் அந்த முறையைத் தான் கைக்கொள்கிறார். கிட்டிணு ஆரம்பத்தில் நவீன முறையில் நம்பிக்கைவைத்து மிக ஆர்வத்துடன் பயிர்ச்செய்கையை மேற்கொண்டானாயினும் வேலப்பாவுக்கும் அவனுக்குமேற்பட்ட பந்தயத்தில் அவன் தோற்றுப் போக வேண்டி வந்தது. கிட்டிணுவின் பயிர் என்னவோ விசுக் விசுக்கென்று வேகம் வேகமாக வளர்ந்து பூத்துக் காய்த்ததென்னவோ உண்மைதான். வேலப்பாவின் பழைய முறையிலான ஆமை வேக பயிர்ச்செய்கையின் முறையும் பலனளித்தனவே. ஆனால் இருவரினதும் உற்பத்தி வரவு செலவுக் கணக்கைப் பார்த்த போது வேலப்பாவின் முறையினது வருவாய் கூடியிருந்ததைக் காண முடிந்தது. அத்துடன் கிட்டிணுவின் பயிர்களின் நோயின் தாக்கமும், அதன் பரவலும் கூட மிக வேகமாகி விட்டதையும் கிட்டிணு கண்கூடாகக் கண்டுகொண்டான்.

ஊரிலுள்ளவர்களின் நிலங்களையெல்லாம் இயந்திரக் கலப்பை இரவு பகலாகச் சப்தமிட்டு சில மணி நேரங்களில் உழுது தள்ளி

---

# கற்பகமே!

மலர்ந்திட்ட மலர் கண்டு
மறந்திட்டேன் மனக்கவலைகளை
புலர்ந்திட்ட அதிகாலைப்பொழுதினிலே
பூஞ்சொத்தாய் தவழ்ந்திட்டாய் என்
கரமதிலே
சிரம் தாழ்த்தி வணங்குகின்றேன் நின்
சீரிய நற்பணி கண்டு
பரம்பொருளின் அருளதனை
பக்குவமாய்ப் பெறுவாய் கற்பகமே
அன்ன நடையாளே கற்பகமே
அழியாது நின்புகழ் இப்புவியினிலே
நன்மைகள் யாவுமே விளைந்திடுமே
நாடி உன்னைப் படிப் போர்க்கே.

— கனக. ஞானசுந்தரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுகிறது என்பதற்காக வேலப்பா அதன் துணையை என்றும் நாடி‌‌னதில்லை. இன்னும் அவர் நாட்கணக்காக வாரக்கணக்காக மினைக் கெட்டு நின்று மாட்டுக் கலப்பையே பிடித்து உழுது வருகிறார். "ஏகசோட்டுக்கு கலப்பையென்று மட்டும் சொல்லத் தெரிந்தால் போதுமா தம்பி? அதன் முக்கிய பகுதிகளைக் கேட்டால் உவங்கள் சொல்லுவாங்களெண்டு நினைக்கிறியோ? இதோ பாரும் இதுதான் படவாள். இதன் உபயோகம் உமக்கு இப்ப தெரியும் தானே? இஞ்சை இது மேழி...தொடர்ந்து ஓர்க்கால், சிறுபிடி என்பதெல்லாம் கூறி அவைகளின் செயல்பாடுகள், காரணகாரியங்கள் ஆகியவை பற்றிய விளக்கங்களை வேலப்பாவிடத்திருந்தே சுற்றுத் தெரிந்து கொண்டிருக்கிறான் கிட்டிணு.

பயிர்களுக்குத் தெளிக்கும் கிருமிநாசினி வகைகளையும், உரப்பசளை வகையறுக்களையும் அவருக்கு அறவே கண்ணில் காட்டப்படாது. இந்த நாசகார வகையறுக்களால் இரண்டு மூன்று. போகத்திற்குப் பிற்பாடு மண்ணே நாசமாய் போய்விடுகிறதாம். வேலப்பாவின் கூற்று இது. ஆடு மாடு கட்டி பட்டி அடைத்து அதன் மல சல பசளையில் விளைந்துவரும் பயிருக்கும், நவீன முறைகளினுல் உற்பத்தி செய்யப்படும் பயிர்களின் தன்மைக்கும் அவர் எவ்வளவோ வேறுபட்ட உண்மைகளைச் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

இந்த வேலப்பாவைப் பற்றிய-அவரது தொழில்துறையில் அவர் பெற்றிருக்கும் ஞானத்தை, நேர்மையை, உழைப்பைப் பற்றி-இன்றேடின்று நினைத்தாலும் பேசினலும் கிட்டிணுவுக்குங் சலிப்பே ஏற்படுவதில்லை.

இத்தனை திறமைமிகு நேர்மையான உழைப்பாளியைப் பற்றி ஊரின் உள்ள மற்றப் பெருங் கமக்காரர்களுக்குத் தெரியாமலா இருந்திருக்கும்? அவர்களிடத்திலும் வேலப்பா வேலை செய்திருக்கிறார்தான். அவர்களும் இவரை நிரந்தர வாரக்காரனுக வைத்துக் கொள்ளத் தெண்டித்ததுமுண்டு. ஆனுல் அவர்களின் பெரியசாதிதுடக்கு மனப்பான்மை இவரைப் பல விஷயங்களில் தூரவிலக்கி வைத்தமையினுல் இவரது அன்பை அவர்களால் நிரந்தரமாகப் பெறமுடியாமற் போய்விட்டது.

இன்னும் உடல் உள்ளம் ஆகிய இரண்டிலும் நிறைந்த ஆரோக்கிய வாழ்வின் உன்னத நிலையிலிருக்கும் இந்த வேலப்பா கிழக்கு வெளிக்க வெகுநேரம் இருக்கும் பொழுதே தோட்டத்தில் இறங்கி வேலை செய்யத் தொடங்கி விடுகிறார். விடிகாலைப் பனியும் அதில் நனைந்துவரும் ஊதல் காற்றும் அவரது குளிர் விட்டுப்போன தேகத்திற்கு மேலும் இதமளித்து செய்யும் தொழிலுக்குச் சுறுசுறுப்பை கூட்டுகின்றதோ என்றே நினைக்கிறான் கிட்டிணு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த விடியப்புற காலச் சாமத்து நித்திரையின் சுகத்தைப் பற்றி கிட்டிணுவுக்கல்லவா தெரியும்! அடிதலை தெரியாத வாறு குறவணவன் புழுவாகச் சுருண்டு போர்வைக்குள் குடங்கி கிடக்கும் இவ்வேளைய சுகத்தை குழப்பும்போது தான் வேலப்பா வின்மேல் எரிச்சல் வருகிறது. என்றாலும் வேலப்பாவால் பயிற்சி அளிக்கப்பட்டுவரும் இந்த நல்ல பழக்கத்தைப் படுக்கைக்குப் போகு முன்புவரை ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்குடைய வனுகவே இருப்பான். ஆனால் தன்னை மறந்த ஆழ்ந்த நித்திரை யின் கடைசிச் சுகத்தில் முந்தைய இரவில் எடுத்துக் கொண்ட பிரதிக்ஞையையெல்லாம் மறந்து வாய் பினுத்தத் தொடங்கி விடுகி ருன்.

"என்ன வேலப்பா இது? எலும்புத் துவாரத்து ஆணிக் குருத்தையே புடுங்கி எடுக்கிற இந்தக் குளிருக்குள்ளை போய்... நல்லா இழுத்துப் போர்த்துக் கொண்டு உலகத்தை மறந்து கிடக்கவேண்டிய நேரத்திலை வந்து அரிகண்டப்படுத்திறியே... கோதாரியிலை போன உனக்கு நித்திரை வரையில்லை யெண்டா என்னையும் போட்டு தொந்தரவு பண்ணி உன்னுேடை எழும்பி இருந்து தொணதொணக்கச் சொல்லுறியோ?..." என்றுபோர் வைக்குள் கிடந்து சொல்லும்கிட் டிணுவின் வார்த்தைகளில் சினப் போ, வெறுப்போ, எரிச்சலோ என்ற தனித்த ஒன்ருக இல்லா மல் எல்லாம் சேர்ந்த ஒரு செல் லச் சிணுங்கலாகவே வெளிவரும்.

"உது உப்புடியொண்டும் சுக மனுபவிச்ச கட்டையில்லைத்தம்பி உந்த மூதேவி வாலாயத்தை விட்டுவிடச் சொல்லி எப்பவோ கூடச் சொல்லுறன். அந்தக் காலத்திலை இந்த வேளைக்கு துலா விலை ஏறினுல்தான் மூவாயிரம் நாலாயிரம் கண்டுக்கு தண்ணி மாறி விடி விடியெண்டிறதுக் கிடையிலை மற்றப் பங்காளிக்கு இணைத்தடி விட்டிடவேணும் கண் டியோ, அப்பிடிப் பழகின பழக் கத்தை இப்ப வந்த இந்த மிசு னுகளாலை மாற்றி விட முடி யுமே'...ஓமோம், ஐந்திலை வளையா தது ஐம்பதிலா வளையப் போகி றது... சரி சரி, எழும்பிவந்து எல் லுப்போலை தண்ணீர் ஊற்றும்," என்ருர் வேலப்பா.

"என்ரை ஐயோ! என்னைக் கொண்டாலும் நான் மாட்டன். உனக்குப் போறவழிக்குப் புண் ணியம் கிடைக்கும் வேலப்பா. உதை மட்டும் கேட்காதை நீயே பார்த்துக்கொண்டிருக்கை யுக்கை ஊத்துப்படுகிற இந்தப் பனி யுக்கை போய் பச்சைத்தண் ணியை அள்ளித் தரச் சொல்லு றியே. நெருப்புத்தணலை வேணு மெண்டாக் கேள்; இரண்டு கை யாலையும் சந்தோஷமாக அள் ளித் தாறன்... நீயே போய் அள்ளிக்குடி வேலப்பா..."

"என்ன தம்பி நித்திரைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதாதியிலே என்னென்னமோ அடாக காரிய மெல்லாம் சொல்லுறீர்? நான் போய்க் கிணத்திலே அள்ளிறதோ... காலாதி காலத்திலே இல்லாத புதுப் பழக்கமாகச் சொல்லுறீர் நாலைக்குப் பேந்து உதாலே வரப்போற வில்லண்டத்தையும், சொழுந்தாடை பிடிப்பையும் பற்றி யோசிச்சீரோ?''

''ஆர்? மற்றப் பங்காளியளைப் பற்றி யோசிக்கிறியாக்கும்! அவங்கள் கிடந்தாங்கள். நீ போய் அள்ளிக்குடி. அதாலே வாற வில்லண்டத்தையும், கொழுந்தாடை பிடிப்பையும் நான் பார்த்துக் கொள்ளுறன். இதென்ன அவங்கடை வீட்டுச்கிணறே? என் வீட்டுச்கிணறு இருந்தாத்தான் என்ன? நீங்க வெட்டிக் கட்டிக் குடுத்த கிணத்திலை தண்ணி அள்ளக் கூடாதெண்டால் இது என்ன ஞாயம் என்டு கேட்கிறேன்? இல்லை; கிணத்தை வெட்டிற போது நீங்கள் தப்பிக் கக்கி அசிங்கப் படுத்தின போது பார்க்காத சாதி முறை அதை ஒப்பேற்றின பின்னாலே தண்ணி அள்ளிற போதுதான் வந்திட்டோ? எல்லாம் வெறும் மாய்மாலம் வேலப்பா. ஒன்றிலுமே ஒன்றுமில்லாத--ஒன்றுக்குமே அர்த்தம் தெரியாத இந்த மடையர்கள் வெறுமனே சாதிசாதியெண்டு இன்னும் புலம்பிக் கொண்டிருக்கிறார்கள்.'' கிட்டிணுவுக்கு கோபம் வந்தநில் உடலெல்லாம் சூடேறி குளிர் விட்டது மாதிரி இருந்தது. போர்வையைத் தூக்கி எறிந்துவிட்டு பேசியவற்றைக் கேட்டவண்ணம் வேலப்பா கன்னத்திற்கு கைகொடுத்தவாறு அவனையே பார்த்தபடி இருக்கிறார்.

வேலப்பாவின் இந்தக் காலங் காத்தாலே பச்சைத் தண்ணீர் குடிக்கும் பழக்கத்தைப்பற்றி -- அதுபனி என்றாலும் சரிதான், எந்தப் பெய்யாப் பெருமழை யென்றாலும் சரிதான் -- கிட்டிணுத்தம்பி முதலில் தவறாகவே முடிவு கட்டியிருந்தான்.

''கள்ளுச் சாராயம் குடிப்பதில் மிகவும் கைதேர்ந்தவராயிருக்க வேண்டுமென்றும், அதன் நிமித்தம் ஏற்படும் வயிற்றுப் புகைச்சலையும், எரிவையும் தணிப்பதற்கே இந்த 'ஒருபுறம் விடியமுந்திய' பச்சைத் தண்ணீர் குடிக்கும் பழக்கத்தை வாலாயப்படுத்திக் கொண்டிருக்கிறார், என்றும் நினைத்திருந்த கிட்டிணுத் தம்பிக்கு, இதுபற்றி சில நாட்களுக்கு முன்பு வேலப்பாவுடன் கதைத்துப் பார்த்த போதுதான் அதன் உண்மை தெரியவந்தது. இன்றுவரை இந்த வேலப்பாவின் நல்ல திடகாத்திரமான தேக ஆரோக்கியத்திற்குரிய பழக்கத்தின் உண்மை தெரியவந்த போது கிட்டிணு அது பற்றி வியந்து கொண்டது மட்டுமல்லாமல் அந்த நல்ல முன்மாதிரியைத் தானும் மெல்ல மெல்லப் பின்பற்ற வேண்டுமென்றும் தீர்மானித்து மிருக்கிறான்.

பழைய சோற்றுத் தண்ணீரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(நீராகாரம்) வேலப்பாவின் காலைப்பான மென்பதும் அது இல்லாத போதினிலே தான் பச்சைத் தண்ணீரை பருகுவதென்பதும் தெரியவந்தது. அவருடைய இந்த நீண்ட நோய் நொடியற்ற வாழ்க்கைக் காலத்திலே 'தேத்தண்ணி கோப்பி'யை சுடச்சுட இடித்து தேகத்திலிருந்து குளிர் விட்டுப் போகச் செய்ததுமில்லை; அதன் நிமித்தம் உடற் சுறு சுறுப்பை வருவித்துக் கொள்ள நினைத்ததுமில்லையாம். உடலின் உள்ளுறுப்புகளின் மலர்ச்சிக்கு காலையில் குடிக்கும் சுடுபானம் பெருத்த குந்தகம் விளைவிக்கிறது என்பதுடன், தன்கால கட்டத்து பழக்கமும் அதுவாகி விட்டதாகவும் சொன்னார்.

வேலப்பாவின் "ஒருபுறம் விடிய முந்திய" பச்சைத்தண்ணீர் பருகும் பழக்கத்திற்கு அவர் கூறிய கருத்துக்களை தன் போக்கில் சிறிது நேரம் நினைத்துப் பார்த்த கிட்டிணுத்தம்பி மறுபடியும் வேலப்பாவுக்குச் சொன்னான்.

"இஞ்சை பார் வேலப்பா, நீ ஒண்டுக்கும் பயப்படாதை. உந்தக் கிணத்திலை நீ இண்டைக்குத் தண்ணி அள்ளிக் குடிக்கத்தான் வேணும். மற்றப் பங்காளிகளையும் அதாலைவாற கொழுந்தாடைபிடிப்பையும் நான் பார்த்துக்கொள்ளுறன். ம் எழும்பு .."

கிட்டிணுத்தம்பி இவ்வளவு சொன்ன பிற்பாடும் வேலப்பர் எழுந்து போய் கிணற்றில் தண்ணீர் அள்ளிக் குடிக்க தயங்குவதைக் கண்ட கிட்டிணு அது பற்றி பல வாறாக யோசிக்கலானான்.

'என்ன இருந்தாலும் இன்று நேற்றையை சங்கதியா? பல நூற்றாண்டு காலமாக அற்பர்களால் இந்த மக்களிடத்தில் ஏற்படுத்தி வைக்கப்பட்ட மகா குரூரமான அடிமைத் தனத்தில பயப்பிராந்தி அவ்வளவு சுலபத்தில் விட்டுப் போய் விடுமா என்ன?, 'என்று கிட்டிணு நினைத்துக் கொள்கிறான்

'அதுக்கில்லை தம்பி வந்து ..' வேலப்பா பேச்சை முடிக்காமல் இழுத்தார்;

"எக்துகில்லை .." கிட்டிணு கேட்கிறான.

"இல்லை, நீர் தம்பியாத் தானே இருக்க விரும்புறீர?',

"தமபியாக மட்டுமில்லை வேலப்பா .. உன்ரை பேரனாகவே இருக்க விருமபுகிறேன் ஏன என்னிலை அசாதந்தியப் படுகிறியோ?"

"நீர் தம்பியாகவும் நான அண்ணனாகவும் இதுவரை காலமும் இருந்த மாதிரி இனியும் இருந்தா போதும். நீர் மட்டுமல்ல, இஞ்செயுள்ள எல்லாக் கமக்காரரும் எங்களுக்குத் தம்பிமார்தான். நாங்கள் உங்களுக்கு அண்ணன் மார்.........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னடா கிழவன் என்னென்னவோ பிசத்துகிருனே என்று யோசிக்கிறியா தம்பி? ஆதியிலே இருந்து இந்தக் கதை இப்படித் தான் தம்பி ஆரம்பிச்சது''

உண்மையில் கிட்டிணுத் தம்பிக்கு வேலப்பா சொல்வதொன்றுமே புரியவில்லை. கிழவர் என்னவோ பிசத்துவதாகவே தான் பட்டது. என்ருலும் வேலப்பாவைக் கேட்கிருன்;

" ஆதியிலேயா? ...... ஆதியிலே அப்பிடி என்ன வேலப்பா இருந்து வந்தது?''

"ஒரு கதைக்கு நீரும் உம்முடைய அண்ணன் மயிலுத்தம்பியும் இருக்கிறியள் எண்டு வைப்பம். கொண்ணர் மயிலு நல்ல மத்தியான சாம்பல் வெய்யிலுக்கை தோட்ட வேலை செய்து போட்டு களைச்சு விழுந்து நாக்கு வரள் ஓடிவந்து கிணற்றெடியிலே இறைச்சுக் கொண்டுநிக்கிற சமயம் உம்மிடத்திலே கையைக் கோலி நீட்டிக்கொண்டு தண்ணீர் கேட்கிருர். அப்ப அந்த கைமண்டையிலேதானை தண்ணி ஊற்ற வேணும்.''

"ஆரில்லை யெண்டது. பின்னை செம்பிலேயா ஊற்றிக் கொடுக்க முடியும்? அந்நேரத்திலை அது சரி வேலப்பா, அதுக்கும் இப்ப நான் சொல்லுறதுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கு. சாதியின்ரை பேரைச் சொல்லிக் கொண்டு உவங்கள் இந்தக் கிணறுகளிலே தண்ணி அள்ளவிடாமல் மறிக்கிறதும் நீங்களும் இன்னும் பயந்துகொண்டு அள்ளிக்குடிக்க மறுக்கிறதும்தான் எனக்குப் பிடிக்கவில்லை. களைச்சு விழுந்து வாற எவருக்கும் ஏனோதானோ என்றில்லாமல் ஓடோடி வந்து தண்ணீர் வார்த்து களைப்பை போக்கி இருந்தால் இந்தச் சாதியெண்ட சங்கதியே இல்லாமல் போயிருக்கும். நீ என்ன சொல்லுருய் வேலப்பா?''

"அங்கைதான் தம்பி நீர் பிழைவிடுகிறீர். ஆரம்பத்தில் அப்பிடியொரு நிலையிலை இருந்து தானே இப்படி ஒரு சாதியாக வேண்டி வந்த தெண்டு நான் கேள்விப் பட்டனுன். அதுக்கு சின்னெரு கதையும் உண்டு, சொல்லுறன் கேளும்.

"--கேளும் தம்பி கிட்டிணு, முன்னொரு காலத்திலே ஏராளனும், சீராளனும் என்று இரண்டு சகோதரர்கள்... இப்ப உம்மையும் கொண்ணர் மயிலுவையும் போலையெண்டு வையுமன். அண்ணன் ஏராளன் மூத்தவன். ஆளும் கொஞ்சம் வாட்ட சாட்டமா இருந்திருப்பான் போலை கிடக்கு; கனதண்டியான வேலை வில்எட்டி எண்டால் .. கலப்பை நுகம் தூக்கிப் பறிக்கிறது, ஏர்பிடிச்சு உழுகிறது போன்ற கடுமையான வேலைகள். இவன் ஏர் பிடிச்சு உழுததாலேதான் இவனுக்கு ஏராளன் என்று பேர் வச்சிருக்கிருங்கள். அப்பெல்லாம் செய்யிற வேலையைக் கொண்டுதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரும் வைப்பாங்கள் போலே கிடக்கு. தம்பி சீராளன் இருக்கி ருன் இல்லையோ... இவன் இளைய வனெண்ட படியாலே நோஞ் சான் என்று சொல்லுற துக்கில்லே. தம்பியைக் கொண்டு நொந்த வேலைகள் செய்விக்கக் கூடாதெண்ட அன்புணர்ச்சி காரணமாக மற்றமற்ற உடம்பிலே நோகாத காரியங்களாக சீர் செய்ய செப்பனிட என்று ஆரம் பித்து இவன் பேர் சீராளன் என் ருச்சு. மொத்தத்தில் அண்ணன் ஏர் பிடித்து உழுத்தினுல் ஏரா ளன் என்றும் மற்றக் காரியங் களை சீர்செய்து கொண்டிருந்த தினுல் தம்பிக்கு சீராளன் என் றும் ஆச்சு. இப்படி இருக்கும் போதுதான் அண்ணனுக்கும், தம்பிக்கும் இருந்து வந்த அன் புக்கும் ஒற்றுமைக்கும் குறுக்காக எல்லேபோட ஆரம்பித்தாள் தம்பி சீராளனின் மனைவி சீதேவி'

வேலப்பா தன் பேச்சு வழக்கில் ஒரு கிராமியக்கதைக் கலைஞனுக் குரிய பாணியில் சொன்ன அந் தக் கதையைக் கிட்டிணுத் தம்பி தன் போக்கில் சிந்தித்துக் கொண்டே அதைப் பற்றியே மேலும் யோசிக்கலானுன்.

'யாழ்ப்பாணத்து கடைகெட்ட அற்ப ஜீவிகளின் பிற்போக்கு அனுஷ்டிப்புகளெல்லாம் அன் றைய அந்தச் சீராளனின் மனைவி சீதேவியின் பிரகடனங்களே' என்பதாக வேலப்பா கதையைச் சொல்லி முடித்திருந்தார்.

இன்று இங்கு நடைமுறை யிலுள்ள பல சான்றுக்களுடன் வேலப்பாவின் கூற்றையும் வைத்து இரண்டிற்கும் வெகு ஒற் றுமை கண்டான் கிட்டிணு.

அண்ணன் ஏராளனுக்குத் தொடர்ந்து ஏற்பட்ட துர்ப்பாக் கிய நிலையால் அவன் நிலபுலங் களும்,மாடுகன்றுகளும் மற்றுமுள் ளவையும் சீதேவியின் ஆலோ சனைப்படி சிறுகச் சிறுகக் கை மாறி அவள் கைக்குட்பட்டதாக வந்தபோது சீராளனை வசப் படுத்துவதற்காக இப்படிச் சொன்னுளாம்.

"கொண்ணையவை இண்டைக் கிருக்கிற கஷ்டத்திலே ஆரும் பிறத்தியாருக்கு அஞ்சுக்கும் இரண்டுக்கும் எண்டு சூடை, தேறை, கருவாட்டு விலைக்கு வித் துச் சுட்டு அத்தழிஞ்சு போற தைக் காட்டிலும் எங்களட்டை கிடந்துதெண்டால்... நாங்க ளென்ன ஊரார் பிறத்தியாரே? நண்டும் குஞ்சுமாகச் சின்னஞ் சிறிசுகளும் இருக்கு.அதுகளின்ரை காலம் வரயுக்கை குடுக்காமலா விட்டிடப் போறம்? எதுக்கும் ஒரு எழுத்துக் கணக்கோடை இருக்கி றதுதான் நல்லது. அப்பதான் கொண்ணையவையும் கெட்டி பத் திரமா நாலு சதத்தை பத்திரமா கையிலே மடியிலே மிச்சம் பிடிச்சு வைச்சு ஈட்டை பாட்டை மீளப் பாப்பினம். பின்னை நாங்களும் சும்மா குடுத்துக் கொண்டிருந் தால் அவையும் வாங்கிக்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான இருப்பினம். ஒரு கைக்கிறு பெருவிரலடை யாளத்தோடை இருக்கிறதாலே வட்டிவாசிக்குப் பயந்து சுறுக்காக மீண்டு நாங்களும் நாலு பேரைப்போலே நல்லாய் வரவேணுமெண்டும் எண்ணுவினம்.''

மனைவி சீதேவியின் ஏற்பாடு இப்போதைக்குச் சரியானதாகப் பட்டதால், அண்ணனும் குடும்பமும் நிர்க்கெதியாய் நடுத்தெருவில் நின்று பரதவிக்காமல் காப்பாற்றி விட்டதாகவே சீராளனும் எண்ணலானன். இந்த ஏற்பாடுகளால் அண்ணனின் மனம் நோகக்கூடாதென்பதற்காக முன்னிலும் பார்க்க சீராளன் அண்ணன் மேல் அதிக பட்ச பாசம் கொண்டு அவன் களைத்து விழுந்து வந்த போதும் மற்ற வேளைகளிலும் குறிப்பறிந்து, கிணற்றில் தண்ணீர் அள்ள விடாது குடிக்கவும், குளிக்கவும் அள்ளி ஊற்றினன் சீராளன். உணவை எடுத்து வைத்துக் கொடுத்து உபசரித்து அன்பு செலுத்தினனும் சீராளன்.

இப்படித் தொடங்கிய உபசாரங்களும், மரியாதை முறைகளும் திரிந்து காலப் போக்கில் ஒரு சாதிக்குரிய வரை முறையாக்கப் பட்டதாக வேலப்பா கதையைச் சொன்னர்.

அந்த அன்றைய அண்ணண் ஏராளனின் வழித் தோன்றலே தாங்கள் என்பதையும் வேலப்பா சொல்லாமல் சொல்லிவிட்டதை யும் எண்ணி தனக்குள் வியந்து கொண்டான்.

அண்ணன் ஏராளனின் மனைவி பிள்ளைகளையும் அடுப்படி வேலைகளுக்கும், மாவிடிக்கவும் நெல்லுக் குத்தவும் என்று இன்னேரின்ன வெளி வேலைகளுக்கு வைத்துக் கொண்டாளாம் சீதேவி. நாளடைவில் -- காலப்போக்கில் அண்ணனின் பிள்ளைகளின் கரைச்சல் தாங்கேலாது என்று சொல்லி 'அதில் தொடாதே; இதில் தொடாதே; அங்கே போகாதே; வீட்டுக்குள்ளே போகாதே ஒதுக்க பதுக்கமாக ஒருபக்கமாக ஒதுங்கிக் கிறது தானே; உங்கடை பழக்க வழக்கங்களைப் பார்த்தால் ஆரும் ஒரு நல்ல சாதி சனம் வந்தா என்ன நினைக்குங்கள்?' என்று எல்லாம் வரையறுத்து விட்டாளாம்.

''ஒரு சாதியான சனம் வந்ததைப் பாத்தியா தம்பி'' என்று வேலப்பா ஒரு நக்கல் ஒன்றையும் போட்டு வைத்தார்.

''இஞ்சைபார் வேலப்பா, நீ அண்ணன் ஏராளனகவும் நான் உனக்கு தம்பி சீராளனகவும் இருக்கிறதிலே வலு சந்தோஷப் படுகிறன். ஆனல் எனக்கு எப்படிப்பட்ட அடுப்படி நாச்சி சீதேவி வரப்போருளோ தெரிய வில்லை இந்த சீதேவிகளுக்காக விரதமிருக்கிற புருஷன் மார் தானே இண்டைக்கும் இஞ்சை நிறைய இருக்கினம். அதனலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் சொல்லுறன் வேலப்பா, எனக்கு வாறவளின்ரை சட்ட திட்டங்கள் எப்படி இருக்குமோ என்ஞலை இப்ப அதை சொல்லே லாது பிறகு நானும் இஞ்சத் தைய சராசரி வெள்ளாடுக ளோடை வெள்ளாடாய் ஆகிஞ லும் ஆகிவிடுவன். அதுக் கிடை யிலை நீ இந்தக் கிணற்றிலை தண்ணி அள்ளி குடிக்கத் துவங்கி விட்டால்தான் நல்லது.

''– நீங்களும் ஆக்கள் பிழை யில்லை. சாதி சாதி யெண்டு சொல்லி ஒதுங்கிநிண்டுகொண்டு சீராளர் ஆகிய எங்களைக் கொண்டு தண்ணீர் ஊற்றுவிக் கிறதுக்கும், சாப்பாடு எடுத்து வைத்து தருவதற்குமாகசாப்பாட் டுக் கடைகளிலை நிக்கிற சப்பிளை செய்யிறவங்கள் மாதிரி ஆக்கிப் போட்டியள். எனி அது நடக்காது வேலப்பா. நீ போய் அள்ளிக் குடி நானும் இப்ப தண்ணிதான் குடிக்கப் போறன் எனக்கும் அள்ளி ஊற்று'' என்று சிரித் துக் கொண்டு வேலப்பாவைப் பார்த்துக் கூறிய கிட்டிணு சொன்ன பின்பும் சிரித்தான.

வேலப்பா சொன்னவைகளை யும், அதற்குத் தன் சொந்தக் கோதாவில்தன் அபிப்பிராயங்களை அவருக்கு பதிலாக அளித்ததை யும் கிட்டிணு மீண்டும் நினைவு படுத்தி சிரித்துக்கொண்டிருந் தான். அப்போது,

''வடமுகம் எங்கையோ உடைச்சிட்டுது தம்பி. தண்ணி இஞ்சை வரயில்லை. ஒருக்கா வாய்க்காலைப் பாரும்'' என்று தோட்டத்தில் பயிர் நடுவே நின்ற வேலப்பாவின் குரல் வந்த போதுதான் கிட்டிணு நினைப்பை விட்டு எழுந்து ஓடிஞன். ஓடும் போதும்.

''வடமுகம் உடைச்சிட்டு தாம் வேலப்பா சொல்கிருர் யாழ்ப் பாணத்தை வடபகுதி என்று தானே சொல்கிருர்கள். இந்த வடபகுதிமுகம் தான் உடைஞ் சிட்டுதா? உடையட்டும், எப் போதோ உடைஞ்சிருக்க வேண் டிய வடமுகம் இப்போதாவது உடைந்ததே'' என்று நினைத்துக் கொண்டு உடைந்த வாய்க்காலை பார்த்து சரிசெய்வதற்காக ஓடி ஞன்.

வெகு நாட்களாகவே கிட்டிணு வுக்கு வேருெரு சநதேகமும் இருந்து வந்தது. தண்ணீர் மறிச் சுக் கட்டுகிற முகப்புக்கு அது தெற்காக இருந்தாலும் வட முகம் என்றுதான் சொல்கிருர் கள். இதன் அர்த்தம் புரியாது வேலப்பாவிடத்தில் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டு மென்று நினைத்திருக்கிருன். அதற்கும் வேளை வந்தது மாதிரி கிட்டிணு மறக்காமல் அதை கேட்கலாஞன்.

''வேலப்பா, தெற்குப் பக்கமாக இருக்கிற தண்ணீர் தடுத்துக கட் டுகிற முகப்புக்கும் ஏன் வடமுகம் என்று சொல்ல வேண்டும்?''

''அது என்னவோ ஒரு பழக் கத்திலை வந்திட்டுது தம்பி. மடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகம் தான் சரியான சொல்—படிச்ச உனக்குத் தெரியாதோ? பாடல் படிப்புகளிலே கூட வருமே "மடைமுகம் திறந்த வெள்ளம் போல்" என்று விளக்கம் சொன்னார் வேலப்பா.

"ஓ அப்பிடியோ சங்கதி......... மடைமுகம் திரிந்து வடமுகம் ஆயிற்று. ஏராளன் என்பவனும் ஏதோ மாதிரி கால நிலையால் ஒரு சாதியாகி சண்டாளர் வரிசையில் வந்து விட்டான். எல்லாம் வசதிக் கேற்ற மாதிரி வைச்சுக் கொண்டது தானே வேலப்பா" கிட்டிணு சொல்லிக் கொண்டிருக்கும் போது வேலப்பா புன்னகை புரிந்து நிற்கிறார்.

கிட்டிணு உடைந்த மடைமுகத்துக்கு மண்ணணைத்து உடைப்பை சரி செய்தான்.

# விண் நோக்கிப் பறந்திடுவோம்

கட்டழகுக் கன்னியவள் காளையை எதிர்நோக்கக்
கருத்திழந்தே கண்மணியை விழிமயங்கிப் பார்த்துநின்றேன்
பொட்டழகுப் பூவையிவள் புன்னகையை உதிர்த்துநிற்க
பக்கத்திற் சென்றவளை நான் திலுக்கே சிரித்து விட்டேன் 1

சிட்டாக அவள்பறக்கப் பறந்திடுமே எந்தன்மனம் அவள்பிறகே
எப்படியும் பேதையுளம் அறிந்திடவே துடித்திட்டேன்
எட்டாளோ அவள் எனக்கு என்றும் ஒரு சந்தேகம்
இருந்தாலும் காதல் கைகூடும் என்பதுவும் நம்பிக்கை 2

தண்ணீர்த் துறையருகில் தவிப்புடனே நின்றேன் நான்
தூரத்தே அசைந்தாலும் என்கண்ணில் நிறைந்தவளை
எண்ணிப் பார்க்கின்றேன் அவளேஎன் சொந்தமென்று பலதடவை
இன்றே உரைத்திடுவேன் என் மனத்தைத் திறந்து 3

தலைச்சுமையாம் தண்ணீக்குடம் தளர்புமந்த வேளையிலே
முத்தாக நீர்த்துளிகள் முகநிலவிற் தெறித்து விழும்
சிலைபோன்ற அவளுருவிற் சிந்தையினைப் பறிகொடுத்தும்
பித்தாகி அலைகின்றேன் பிறவி தொறும் வருவாளோ? 4

மதி முகத்தாள் ஆசை மனதில் விருந்தளிக்க
இயம்புகின்றேன் அவளிடத்தில் காதல் மனக்கவிதை
அதிகாலை நேரமதாம் அமைதி தரும் வேளையதில்
இசைந்தாள் என் விருப்பம் இணைவோம் நாமென்றாள் 5

காதலர்கள் ஆனேம் கடற்கரையில் கைகோர்த்தோம்
தாவிப் பறந்தோம் நாம் பறவைகளோ; ஜோடிகளோ?
சாதல் எமக்கில்லை சந்தோச வாழ்வினுக்காய்
விரைவினிலே கைப்பிடிப்போம் விண்ணோக்கிப் பறந்திடுவோம்! 6

— எஸ். மனோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்ப்பாசத்துக்கும் நீதிக்கும் இடையில் ஒரு பெண் குழந்தை!

அன்றொருநாள் நீதிக்குப் புகழ் பெற்ற சாலமோன் மன்னரின் சபைக்கு ஒரு வழக்கு வந்தது. ஒரு பிள்ளை இரு தாயர், இருவருமே குழந்தை தமக்கேயுரியதென்றனர். மன்னர் இதற்கு அளித்த தீர்ப்பு மன்னரின் புத்திசாதுரியத்தைப் பிரதிபலித்தது.

கே. எஸ். ஏ.

ஆனால் அதேபோன்ற ஒரு வழக்கு விஞ்ஞான விந்தைகளின் அடிப்படையில் மீண்டும் அமெரிக்காவில், நியூ ஜெர்ஸி மாநிலத்தில் விசாரிக்கப்பட்டு அண்மையில் தீர்ப்புக் கூறப்பட்டது.

தாய்ப் பாசத்துக்கும், பணத்துக்கும், மகப்பேற்று ஆசைக்கும் இடையில் நடைபெற்ற இவ்வழக்கில் தாய்ப்பாசம் குறுக்கிடக் கூடாதெனத் தீர்ப்பளித்துள்ளது சட்டம்.

நியூ ஜெர்ஸி மாநிலத்தைச் சேர்ந்த வில்லியத்துக்கும் அவரது மனைவியான எலிஸபெத்துக்கும் குழந்தைகள் இல்லை. எலிஸபெத்துக்கு கருத்தரிக்கும் சாத்தியமின்மையால் எப்படியாவது தமக்கு ஒரு குழந்தையைப் பெறவேண்டுமென விரும்பிய அவர்கள் செயற்கைமுறைக் கருத் தரித்தலின் மூலம் இதனைச் சாதிக்க எண்ணினர்.

தகப்பனுரான வில்லியத்தின் விந்தினை இன்னொரு பெண்ணின் கருப்பையில் செயற்கை முறையாகச் செலுத்தி அக்குழந்தையைப் பெற்றுக்கொள்ள விரும்பினர். தனது கருப்பையைமட்டும் வாடகைக்கு விடக்கூடிய ஒரு பெண்ணைத் தேடிய இவர்கள் அதே மாநிலத்தைச் சேர்ந்த இரண்டு குழந்தைகளுக்குத் தாயான திருமதி வைற்ஹெட் என்பவரைச் சந்தித்துஅவரது சம்மதத்தின்பேரில் 10,000 டொலர்கள் பேரம்பேசி ஓர் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டனர்.

இவ்வொப்பந்தப் பிரகாரம் திருமதி வைற்ஹெட் வில்லியத்தின்விந்தினை செயற்கைமுறையில் தனது கருப்பையில் ஏற்றுக் குழந்தைக்குத் தாயானுர். அக்குழந்தையைப் பத்து மாதமும் தன் வயிற்றில் சுமந்து 1986 மார்ச் மாதம் 27 ம் திகதி ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தார்.

இக் குழந்தையைப் பெற்றதும் தாய்ப்பாசம் குறுக்கிட்டது. அழ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிய அந்தப் பெண் குழந்தையை வில்லியம் தம்பதிகளிடம் ஒப்படைக்க அவருக்கு மனம்வரவில்லை.

தான் பெற்றுக்கொண்ட பணத்தைத் திருப்பிக் கொடுத்து ஒப்பந்தத்தை இரத்துச்செய்து குழந்தையைத் தான் வளர்க்கவே விரும்பினர்,

வில்லியம் தம்பதிகள் ஏமாற்றமடைந்து நீதிமன்றத்தின் துணையை நாடினர். எதிர்வழக்காடவும் தயாரானர் ''பெற்ற'' தாயாரான வைற்ஹெட்.

சென்ற இரண்டு மாதங்களாக குடும்ப நீதிமன்றமொன்றில் நடந்த இந்த வழக்கு ஏப்ரல் முதலாம் திகதி தீர்ப்பு வழங்கப்பட்டது.

இத் தீர்ப்பு பாச மிகுதியால் தனது குழந்தை தனக்கேயுரியதென வாதிட்ட தாயாருக்கு எதிராகவே அமைந்தது.

இத்தீர்ப்பினை வழங்கிய நீதிபதி குழந்தை, வில்லியம் தம்பதிகளுக்கே சேரவேண்டுமெனத் தீர்ப்பு வழங்கியபோது நீதிமன்றத்தில் திரண்டிருந்த மக்கள் கரகோஷம் செய்து மகிழ்ச்சிதெரிவித்தனர்.

ஆனல் தீர்ப்பினைக் கேட்ட வைற்ஹெட்டின் கோரிக்கைக்கு ஆதரவான மக்கள் கூட்டமும் ''தாய்ப் பாசத்துக்கு நிகராக எதுவுமேயில்லை'' எனச் சுலோகங்களைத் தாங்கி ஆர்ப்பரித்தனர்.

இத் தீர்ப்பினை வழங்கிய நீதிபதி "இக் குழந்தையின் தகப்பனுக்கே நாம் பூரண உரிமைகளையும் பாதுகாப்பினையும் வழங்கி தாயாரின் உரிமைகளை இரத்துச் செய்கிறோம்'' எனக் குறிப்பிட்டு நீதியின் பேரால் இன்னும் ஒரு படி சென்று "தாயாரான வைற்ஹெட் இக் குழந்தையினை மீண்டும் பார்க்கவே கூடாதெனவும்'' குறிப்பிட்டுள்ளார்.

தற்பொழுது ஒரு வயதாகியுள்ள மெலிஸ்ஸா என்ற பிரச்சினைக்குரிய இக் குழந்தையின் தாயாரான வைற்ஹெட் தீர்ப்பினை எதிர்த்து அமெரிக்க உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யத் தயாராகியுள்ளார்.

பாச உணர்வுகளையும் நீதியையும் போராடவைத்து விஞ்ஞான உலகம் வேடிக்கை பார்க்கிறது!

---

புகையும் சுவையும்

**மனைவி:** பார்த்திங்களே! நீங்கள் சிகரெட் பிடிக்கிறதை விட்டதாலை உணவை எவ்வளவு சுவைத்துச் சாப்பிடுகிறீங்கள் எண்டு?

**கணவன்;** ஓமப்பா, எனக்கு இப்பதான் தெரியுது. இவ்வளவு நாளும் சுவையில்லாத கன சாப்பாட்டு வகைகளையும் சாப்பிட்டிருக்கிறன் எண்டு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தித் திட்டம் 1987 யாருக்காக?

[யாழ். குடாநாட்டில் உள்ள 16 தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களிலும் 1-2-87 ம் திகதி முதல் நடைமுறையில் வந்துள்ள புதிய திட்டம் பற்றிய பேச்சாகவுள்ளது. தொழிலாளர், பணியாளர், நெறியாளர், பாவனையாளர்கள் போன்ற பலதரப்பட்ட மக்கள் மத்தியிலும் இதே பேச்சாகவேயுள்ளது. ஏன் இந்தத் திட்டம்? யாருடைய திட்டம்? இந்தத் திட்டத்தினால் யாருக்கு லாபம்? பனைத் தொழிலாளர் வயிற்றில் அடிக்கின்ற திட்டமா? அல்லாது தென்னைத் தொழிலாளர் வயிற்றில் அடிக்கும் திட்டமா? ஏன் இந்த பனஞ்சீனி உற்பத்தி? ஏன் இந்த அபிவிருத்தி நிதி? ஏன் இந்த லீற்றர் முறை? இது போன்ற எண்ணிறந்த கேள்விகள் ஒவ்வொருவர் மத்தியிலிருந்தும் எழுந்த வண்ணமாக இருக்கும் இவ்வேளையில் இவைகளுக்கு எல்லாம் ஒட்டுமொத்தமாகவும் சுருக்கமாகவும் பதிலளிக்கிறார். இக் கட்டுரையாசிரியர்.]

தமிழ் மக்கள் முன்பு எப்போதும் இல்லாதவாறு இன்று பல்வேறு வழிகளில் பல்வேறு பிரச்சினைகளால் சூழப்பட்டு மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் வாழ்ந்து வருகின்றார்கள். இவ் வேளையில் தமிழ் மககள் மத்தியிலுள்ள சகல ஒடுக்கு முறைகளும் தளர்வடைந்து பழைய சமூக அமைப்பும், பழைய வாழ்க்கை முறைகளும், குழப்பமடைந்த நிலையில் புதிய உத்வேகமான சூழலில் தன்னம்பிக்கை மிக்க வாழ்க்கை முறையொன்று இன்று தோற்றமடைந்து வருவது கண் கூடு. இப புதிய வாழ்க்கை முறையில் சோசலிசத்துக்கான விதைகளை ஊன்றி, உறுதியுடன் புதிய பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வது தமிழ் மக்கள் ஒவ்வொருவரினதும் இன்றைய பிரதான கடமையாகும்.

இதுவரையும் கொழும்பை மையமாகக் கொண்ட பொருளாதாரதிட்டங்களையே நாம் மேற்கொணடு வந்துள்ளோம். இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் கொழும்பை மையமாகக் கொண்ட பொருளாதாரத் திட்டங்கள் யாவும் நிறுததப்படுவதுடன் ஒவ்வொரு குடாநாட்டு மகனும் தமது அன்றாட உணவுத் தேவைககே வழி இல்லாது பட்டினிச் சாவை எதிர் நோக்க வேண்டிய நிலைக்கு எதிர்காலத்தில் உள்ளாக்கப்படுவார் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டியவர்களாகவுள்ளோம். இந்நிலையில் சகல தமிழ் மக்களும் தம்மைத தாமே பாதுகாத்துக் கொள்வது மிகவும் அத்தியாவசியமாகின்றது. எமது பிரதேசத்திலேயே நாம் சுயமாகக்

**வி. ஜீ. தங்கவேல்**
துணைத்தலைவர், திட்டமிடல் குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாஹொன்றிச் சுயமாகச் சிந்தித்து சுய பொருளாதாரத்தை நன்கு திட்டமிட்ட அமைப்பின் மூலம் கட்டியெழுப்புதல் அவசியமாகின்றது. தமிழ் மண்ணின் பொருளாதார அபிவிருத்தியை இலகுவாக்கும் வகையில் அடித்தளங்களை இடக்கூடியதாக இன்றைய எமது திட்டங்கள் அமைவதுடன் ஏற்படும் பொருளாதாரத் தீர்வுகள் யாவும் மக்களை எல்லா வகையிலும் ஏற்றத்தாழ்வு அற்றவர்களாகவும் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைப் பெறுபவர்களாகவும் மாற்றுகின்ற திட்டங்களாகவும் இருத்தல் வேண்டும்.

இந்த வகையில் இத்தமிழ் மண்ணின் பொருளாதார வளங்களில் பிரதான இடம் வகிக்கும் பனை வளத்தின் பயன்பாட்டை எமது முன்னோர்கள் நன்கு உணர்ந்து கொண்டிருப்பதுடன் பெருமளவு பயன்படுத்தியும் தமது சுய தேவையினைப் பூர்த்தி செய்தும் வந்திருக்கின்றார்கள். ஆனால் இடைக்காலத்தில் ஏற்பட்ட அசிரத்தை காரணமாகவும், இறக்குமதிப் பொருட்களின் தாக்கத்தினாலும், ஆடம்பர மோகத்தினாலும் இவ் அருமையான மூலவளம் கைவிடப்பட்டு எமது உயிர்வாழ்வுக்கான உணவுத் தேவைக்காக அந்நியரிடம் கையேந்தி வாழும் சூழ்நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளோம். இன்றைய சூழ்நிலையில் இறக்குமதியாகும் நவ நாகரிக உணவுப் பொருட்களுக்குப் பிரதியீடாக பனையின் பல்வேறு உணவுப் பொருட்கள் அமைவதால் அவைகளை நவீன தொழில் நுட்ப ஆய்வின் அடிப்படையில் ஆய்வு செய்து தரமான உணவுப் பொருட்களைத் தயாரித்து வழங்கவும் கூட்டுப் பொறுப்புணர்ச்சியுடன் செயற்படவும் பின்வரும் எடுகோள்கள் எமக்கு உதவியாக அமைகின்றன.

1. குடாநாட்டு மக்களின் நுகர்வுக்காக வருடாந்தம் 16,000 மெ. தொன் சீனி தேவைப்படுகின்றது.

2. ஒரு மாதம் ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் (1,50,000) போத்தல் சாராயம் வீதம் ஒரு வருடத்தில் 13 இலட்சத்து 50 ஆயிரம் லீற்றர் சாராயம் தென் பகுதியில் இருந்து வட பகுதிக்கு விநியோகிக்கப்படுகிறது. இதன் அண்ணளவான பெறுமதி—9 கோடி ரூபாவாகும்.

3. வருடாந்தம் 37 இலட்சம் லீற்றர் தென்னங்கள்ளும் 60 இலட்சம் லீற்றர் பனங்கள்ளும் நுகர்வோரினால் அருந்தப்படுகின்றது.

4. 1972ம் ஆண்டு மே மாதத்துக்கு முன் 15,000 பனைத் தொழில் வல்லுனர்கள் இருந்தார்கள். 1972ம் ஆண்டு மே மாதம் 12,000 தொழிலாளர்கள் சகல தெ.ப.கூ. சங்கங்களிலும் பதிவு செய்துள்ளனர்கள். ஆனால் இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4500 முழு நேரத் தொழிலாளர்களும் 200 பகுதி நேர தொழிலாளர்களும் மட்டுமே சங்கங்களில் இணைந்து தொழில் மேற்கொண்டு வருகின்றனர்கள். வருடாந்தம் தொழிலாளர் தொகை குறைதல்.

5. பனை வளத்தினை மையமாகக் கொண்டு பல்வேறு ஸ்தாபனங்கள் செயற்பட்டு வருகின்றன. பனை அபிவிருத்திச்சபை, வடமாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், 16 தெங்குபனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள் என்பன. இவ் ஸ்தாபனங்களின் செயற்பாடுகள் ஒருங்கிணைக்கப்படாமல் மூலவளப் பயன்பாடு உச்சமாக்கப்படமாட்டாது.

6. பனைவளமும், பனைவளத்தினை நம்பி வாழுகின்ற பனைத் தொழில் வல்லுனர்களையும் அவர்களின் குடும்பங்களையும் சமூக ஒடுக்கு முறைகளுக்கு உள்ளாக்கப்பட்டுப் பொருளாதார ரீதியிலும் சமூகரீதியிலும் பின் தள்ளப்பட்ட நிலையில் இருந்து மீட்பதாயின் சமூகத்தினைத் திட்டமிட்ட பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகள் மூலமே மேம்படுத்தல் வேண்டும்.

மேற்போந்த பிரதான ஆறு காரணிகளையும் மையமாகக் கொண்டுதான் 1987 ம் ஆண்டுக்கான திட்டத்தினை திட்டமிடல் குழுவினர் மேற்கொண்டார்கள். ஒட்டு மொத்தமாகப் பனைவளத்தினை முழுமையாகப் பயன்படுத்தி எதிர்காலத்தில் ஏற்படவிருக்கும் பல்வேறு அரசியல், பொருளாதார காரணிகளையும் அடிப்படையாகக் கொண்டும் தன்னிறைவுள்ள ஒரு புதிய சமுதாயத்தினை அமைக்கும் வகையிலும் திட்டம் அமைய வேண்டுமென்பதைக் கவனத்தில் கொண்டு அதனை நிறைவு செய்வதற்குப் பின்வரும் ஒழுங்குகளை அடி அத்திவாரமாகக் கொள்ளவேண்டியது அத்தியாவசியமாகப்பட்டது. - கடந்த 14 வருடகாலமாக சகல தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களிலும் பெற்ற அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு திட்டத்தினைத் தயாரிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

1. சகல சங்கங்களிலும் தென்னங்கள்ளின் கொள்வனவு, விற்பனவு தொடர்பில் வருடம் பூராவும் ஒரேவிலையினை அமுல் படுத்தல்.

2. சகல சங்கங்களிலும் பனை உற்பத்திகளான கள், பதனீர் போன்றவற்றின் நிர்ணயிக்கப்பட்ட விலைகள் பருவகாலத்தில் ஒன்றும் பருவமற்ற காலத்தில் ஒன்றுமாகத் திட்டவட்டமான முறையில் கொள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளவு, விற்பனவு விலைகள் நிர்ணயிக்கப்பட்டன.

3. கடந்த காலங்களைப் போல் அல்லாது சகல பனைத் தொழில் வல்லுனர்களினதும் முழு மனித வலுவினைப் பயன்படுத்தும் வகையில் மட்டுப்படுத்தப் படாத வகையில் பனைகள் தொழிலுக்கு வழங்கப் பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

4. பனைத் தொழில் வல்லுனர்களின் ஊதியத்தினை உறுதிப் படுத்தும் வகையில் அவர்கள் சங்கத்துக்கு வழங்கும் உற்பத்திப் பொருட்களுக்கு உறுதியான விலை நிர்ணயம் தீர்மானிக்கப்பட்டது.

5. தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களில் நுகர்வு மட்டத்துக்கு மேலாகக் கொள்வனவு செய்யப்படும் உற்பத்திப் பொருட்களை நவீன தொழில் நுட்பயுக்திகளைக் கையாண்டு மாற்று உற்பத்திப் பொருட்களை உருவாக்கலும் சந்தைப் படுத்தலும்.

(27ம் பக்கம் பார்க்க)

அட்டைப்பட விளக்கம்

# தாயகத்தில் வளரும் தொழிற்சாலைகள்

சங்கானை சங்கம் தனது தொழில் ஆலை மூலம் பிரதானமாக கள் அடைப்புத் தொழிலையே மேற் கொள்கின்றது. சங்கம் இக் கள் அடைப் புத் தொழிலை மேற்கொள்ள எத்தனித்த போது பல இலட்சம் ரூபா பெறுமதியான நீராவி இயந்திர சாதனம் வேண்டுமென்ற பயமுறுத்தலை முறியடித்து மிகக் குறைந்த செலவில் உள்ளூர் தயாரிப்பிலான சாதனத்தின் மூலம் இத்தொழிலை மேற்கொண்டு வெற்றி கண்டுள்ளது. இன்று இச் சிக்கன முறையைப் பின்பற்றி ஏனைய சங்கங்களும் பெரும் பயனடைந்து வருகின்றன.

அத்துடன் கள்ளிலிருந்து பெண், ஆண், சிறுவர், சிறுமியர் என்ற பாகுபாடின்றி சகலரும் பருகி இன்புறுவதற்கு ஏற்ற வகையில் (கொக்கா கோலா போன்ற) இனிய பானம் ஒன்று வெகு விரைவில் பாவனைக்கு வர ஏற்ற வகையில் ஆராய்ச்சிகள் நடைபெற்று வருவதாகவும் சங்கத்தலைவர் திரு. சு. நடேசு கற்பகத்திடம் தெரிவித்தார்.

சங்கானை சங்கத்தின் ஏனைய உற்பத்திகள் ஆய்வுகள் பற்றிய நேரடி விஜய விசேட கட்டுரையை அடுத்த கற்பகத்தில் எதிர்பாருங்கள்.

அட்டைப்படத்தில் இச் சங்க உத்தியோகத்தர்கள் காணப்படுகின்றனர். இடமிருந்து வலம்: பொதுமுகாமையாளர் திரு. எஸ். செல்வராசா, தலைவர் திரு. சு. நடேசு, உற்பத்திமுகாமையாளர் திரு. இ. றவுடேந்திரன் மற்றும் உற்பத்தி உதவியாளர்களும் காணப் படுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "எங்கள் வாழ்த்தும் வேண்டுகோளும்"

பிரபவ புத்தாண்டில் எங்கள் உளங்கனிந்த நல்வாழ்த்து
உங்களுக்குரியதாகுக !

முந்திய ஆண்டுகளில் நீங்கள் தந்த ஆதரவு
எங்களுக்கு இன்னும் கிடைப்பதாகுக!

## தங்கள் ஆதரவு எங்கள் அறப்பணிக்கே!




உள்ளூர்
மூலப்பொருட்களை
உற்பத்திக்கு எடுப்போம்!
உள்ளூர்த்
தயாரிப்புகளுக்கு
ஆதரவு கொடுப்போம்!

## "காலம் பெறுமதியானது"

துரித சலவைக்கு மில்க்வைற் சலவைப் பவுடரை
வாங்கி உபயோகியுங்கள்
56 கிறும் பைகற் ரூபா 2/- மட்டுமே!

ஐந்து வெற்றுப் பைக்கற்றுகளை அனுப்பி சித்த ஆயுர்வேத வைத்திய மலராக வெளிவந்துள்ள மில்க்வைற் செய்தி இதழ்-136 ஐப் பெற்றுக் கொள்ளுங்கள்.


ஆரோக்கிய வாழ்வுக்கு
பனம் பண்டங்களை உபயோகியுங்கள்

**மில்க்வைற் தொழிலகம்** த.பெ.எண் 77
யாழ்ப்பாணம்

தொலைபேசி: 23233


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி 1
## ரொக்கப் பரிசு: ரூ 50-00




குறுக்கெழுத்துப் போட்டி 1

பெயர்: ..............................................................

விலாசம்: ..............................................................

..............................................................

..............................................................

..............................................................

ஒப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இடமிருந்து வலம்:**

1. இவரைத் தொழ வாழ்வு மிகுத்து வரும்.
4. வாழ்வாங்கு வாழ்ந்திட வழி சொல்லும்.
5. சிவனுக்கு மறுபெயர்
7. இந்தத் திருப்தியுடன் கடமை செய்ய வேண்டும்.
10. வெண்பா நாற்பது.

**மேலிருந்து கீழ்:**

1. இருளை அகற்றிட நிச்சயம் தேவை.
2. யாளிதான் அரவில்லை.
3. விண்வெளிப் பயணத்தின் முன்னோடி.
6. மகள் தலைகீழாய் நடக்கிருள்.
8. ஆசானுக்கு உயிரில்லை.
9. கண்ணனுக்கு வெண்ணெய் உயரத்தில்.
11. பெரியோரும் சில வேளைகளில் நிலைமாறிப் போதல் உண்டு.

**நிபந்தனைகள்:**

❋ விடைகள், தரப்பட்ட கூப்பன்களில் நிரப்பப்பட்டு ஆசிரியர், 'கற்பகம்' 330, கே. கே. எஸ் ரோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

❋ பரிசு பெற்றவர் விபரம் அடுத்த மாதக் 'கற்பகம்' இதழில் வெளியிடப்படும்.

❋ முதற்பரிசு ரூபா 25/-. 2 ம் பரிசு ரூபா 15/-. 3 ம் பரிசு ரூபா 10/- பரிசுகள் யாவும் போட்டி முடிவுகள் வெளியானதும் அனுப்பி வைக்கப்படும்.

❋ கடிதத்தின் இடதுபக்க மேல் மூலையில் "குறுக்கெழுத்துப் போட்டி இல. 1" எனக் குறிப்பிடல் வேண்டும்.

❋ எவ் விடயங்களிலும் ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.

❋ உங்கள் விடைகளை உடனே அனுப்பிவையுங்கள்.

---

**அபிவிருத்தித் திட்ட ... ... ...**

(28ம் பக்கத் தொடர்ச்சி)

6. பனை, தென்னை உரிமையாளர்களை ஸ்தாபனமயப்படுத்துவதன் மூலம் அவர்களும் அபிவிருத்திகளில் கூடுதல் அக்கறை கொள்ளச் செய்யும் வகையில் திட்டத்தினை விரிவுபடுத்தல்.

7. பனை உற்பத்திசுளான கள்ளுக்கும் பதனீருக்கும் சமவிலை நிர்ணயிக்கப்பட்டது.

மேற் குறிப்பிட்ட ஒழுங்குகளை அடி அத்திவாரமாகக் கொண்டு திட்டமிடல் குழு 1987 ம் ஆண்டுக்கான அத்திபாரத்தினை அமைக்கத் தீர்மானித்தது.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கச் செய்திகள் - பங்குனி சித்திரை 1987

## கட்டுப்பாட்டு விலையில் எரிபொருள்

பாண்டியன்குளம் - துணுக்காய் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் சடந்த 1-7-85 தொடக்கம் 30-6-86 வரையிலான காலப் பகுதியில் இலாபகரமாக இயங்கி வந்துள்ளதாக சங்க பதில் பொது முகாமையாளர் திரு. க. யோகதாசன் கற்பகத்திடம் தெரிவித்தார். இக்கால கட்டத்தில் சங்கம் இலாபத்தில் இயங்கியதற்கான அத்தாட்சியாக எண்பார்வை அறிக்கை அதனை உறுதிப்படுத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் எரிபொருளுக்கு ஏற்பட்டுள்ள கெடுபிடிகளைச் சமாளிக்கும் விதத்தில் மக்களின் அன்ருட தேவைக்கான எரிபொருளை மல்லாவி கற்கம் விற்பனை நிலையத்தினூடாக கட்டுப்பாட்டு விலையில் இச் சகங்ம் வழங்கிவருவதாகவும் பொது முகாமையாளர் திரு. க. யோகதாசன் தெரிவித்தார்.

## வெள்ளிக் கேடயம் அன்பளிப்பு

நெல்லியடி கல்விக் கோட்ட கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிக்கு பரிசளிப்பதற்காக வெள்ளிக்கேடயம் வழங்குவதற்கு கட்டைவேலி உடுப்பிட்டி தெங்குபனம் பொருள் கூட்டுறவுச் சங்கம் ரூபா 500 ஒதுக்கீடு செய்துள்ளது.

20-3-87 ல் நடைபெற்ற இயக்குனர் சபைக் கூட்டத்தில் இவ் ஒதுக்கீட்டுக்கான தீர்மானம் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

## குழாய் நீர் பெற

### கட்டைவேலி சங்கம் உதவி

வதிரி வடக்கு மெதடிஸ்த மிசன் தமிழ் வித்தியாலய மாணவருக்கு இருந்து வந்த குடிதண்ணீர் பிரச்சினை கட்டைவேலி உடுப்பிட்டி சங்கத்தின் தாராள உதவியினுல் தீர்த்து வைக்கப்பட்டது.

குறித்த பாடசாலையின் அபிவிருத்திச் சங்கம் கட்டைவேலி உடுப்பிட்டி தெ. ப. பொ. சங்கத்தின் உதவியை நாடியதின் பேரில் குழாய் மூலம் மேற்படி பாடசாலைக்கு தண்ணீர் கிடைக்கச்செய்வதற்காக ரூபா 1100 நன்கொடையாக வழங்கியுள்ளதாக சங்கப் பொது முகாமையாளர் திரு. பொ. சத்தியமூர்த்தி கற்பகத்திடம் தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் இருந்து தமிழகம் வரை...

## 13

பத்மநாபபுரம் அரண்மனையில் காணப்படும் பனைமரப் பிடியிலான ஆயுதங்கள் அக்காலப் போர்களில் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களாகும். மிகுந்த வலிமையும், உறுதியும் கொண்டமையினாலேயே இந்த ஆயுதங்களுக்கும் பனைமரப் பிடிகளைப் பயன்படுத்தி உள்ளனர்.

முற்றி வைரமேறிய பனங்கட்டையில் கறையான் அரிப்பதில்லை. இது உறுதியானது பல நூற்றாண்டுகள் வரை மக்கிப் போகாது. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மணப்பாட்டில் டச்சுக்காரர்களால் நிர்மாணிக்கப்பட்ட கிறிஸ்தவ தேவாலயத்தில் பயன் படுத்தப்

# புதிய அபிவிருத்தித் திட்டத்தினல் அங்கத்தவரின் வருமானக்குறைவு தவிர்க்கப்பட்டது

கட்டைவேலி உடுப்பிட்டி தெ. ப. பொ. கூ. சங்கம் 1-2-87 ல் ஆரம்பிக்கப்பட்ட புதிய அபிவிருத்தித் திட்டத்திற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கிய சங்க அங்கத்தவருக்கு 40000 ரூபாவை இரண்டாந்தடவைப் பணமாக வழங்கி கௌரவித்துள்ளது.

இக்கொடுப்பனவு லீற்றருக்கு 50 சதம் என்ற அடிப்படையில் சகல அங்கத்தவருக்கும் வழங்கப்பட்டது.

சங்கத்தலைவர் திரு. செ. தங்கராசா தலைமையில் சங்கப் பணிமனையில் 25-3-87ல் இக்கொடுப்பனவு வைபவம் இடம் பெற்றது.

சங்கங்களின் சமாச பொதுமுகாமையாளர், திரு. ஆ. ந. இராசேந்திரன் கூட்டுறவுப் புனருத்தாரணக் குழுவைச் சேர்ந்த அருள் மாஸ்றர், செங்கதிர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். சமாசப் பொது முகாமையாளர் திரு. ஆ. ந. இராசேந்திரனும், குறித்த சங்கத்தின் மூத்த உறுப்பினருமான திரு. ஆ. ஆழ்வாப்பிள்ளையும் இரண்டாந்தடவைப் பணத்தை அங்கத்தவருக்கு வழங்கினர். புதிய திட்டத்தின்படி கொள்வனவு லீற்றருக்கு 2-50 சதம் வழங்கப்பட்ட போதிலும் பனங்கள் உற்பத்தி குறைந்த காலமாகிய மாசி மாதத்திலும் பல அங்கத்தவர்கள் மாத வருமானமாக ரூபா 2000 முதல் 4500 வரை பெற்றிருப்பதும் குறிப்பிடக்கூடியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுள்ள பனஞ்சட்டங்கள் இன்றும் உறுதி மாறுதலைகளாகவே உள்ளன.

மாதவரம் பால் பண்ணைக்கு அருகிலுள்ள பனைப் பொருள் உற்பத்தி நிலையத்தில் பனங் கட்டையால் கட்டில்கள், விளக்குத் தண்டுகள், கைத்தடிகள், பட்டன் பொல்லுகள் முதலியன உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. பலரகங்களில் உருவாக்கப் படும் கைத் தடிகளுக்கு விஞ்ஞான ரீதியில் மெருகு ஊட்டிப் பளபளப்பாக்கப்படுகிறது. மாதவரத்திலுள்ள பனைப் பண்ணையில் பனஞ் சட்டக் கட்டில்கள் செய்து பனைநாரிப் பின்னல் போடப்படுகின்றது. நல்ல வைர மேறிய பனங் கட்டைகள் திருச் செந்தூரில் இருந்து வரவழைக்கப்பட்டுப் பனங்கட்டை வேலையில் அனுபவம் மிக்கவர்களினால் கட்டில் செய்யப்படுகின்றது.

---

க. நடராசா

தலைவர், பனை அபிவிருத்திச்சபை

---

தமிழகத்தில் தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையம் பனைப் பொருள் உற்பத்தி மையத் திட்டங்களை உருவாக்கி அத்திட்டங்களைச் சிறப்பாக நிறைவேற்றி வருவது என்னைப் பெரிதும் கவர்ந்து கொண்டது. இப்பனைப் பொருள் உற்பத்தி மையத்திட்டத்தின் கீழ் வட ஆற்காடு மாவட்டத்தில் மங்கலம் மாமண்டூரில் ஆதிதிராவிடர்களுக்காக சிறப்புத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்சென்று தமிழக அரசு 18.67 லட்சம் ரூபாவை மானியமாக வழங்கியது. பயிற்சித் திட்டங்களுக்காக ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அரசு 4·64 லட்சம் ரூபாவை மானியமாக வழங்கியுள்ளது. இத்திட்டம் 1983 முதல் செயற்படத் தொடங்கி இப்போது மிகவும் பாரிய முன்னேற்றம் அடைந்துள்ளது. ஆரம்ப கட்டத்தில் 310 பேருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. இதுவரையில் ஆயிரக் கணக்கானோர் பயிற்சி பெற்றுள்ளனர்.

பயிற்சி பெற்றவர்களைத் தகுந்த முறையில் பயன் படுத்திக் கோராத்தும்பு உற்பத்தி நடைபெறுகிறது. இத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக வந்தவாசி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 3709 பனை மரங்கள் மாநில இணையத்திற்கு வழங்கப் பட்டுள்ளன.

தென் ஆற்காடு மாவட்டத்தில் புடையூரில் பனைப் பொருள் உற்பத்தி மையம் 1982 ம் ஆண்டு முதல் செயற்படத் தொடங்கியது. இப்பனைப் பொருள் உற்பத்தி மையத்தை அமைத்து ஆதித் திராவிடர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக அரசு மானியம் வழங்கியது. தருமபுரி மாவட்டத்தில் மத்தூரில் ஒரு பனைப் பொருள் மையம் இயங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிக் கொண்டிருக்கிறது. இம் மையம் பனைப் பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்து வருகின்றது.

இப்பனைப்பொருள் உற்பத்தி மையங்கள் போன்று பனை அபிவிருத்திச் சபை இங்கு கிராமரீதியில் உற்பத்திப் பயிற்சி நிலையங்களை நடாத்தி வருகின்றது. இப் பயிற்சி நிலையங்களில் பயிற்சியாளர்கள் உற்பத்தி செய்யும் உற்பத்திப் பொருட்களைச்சபை வாங்கிச் சந்தைப்படுத்தி வருகின்றது. இதன் மூலம் பயிற்சியாளர்களை ஊக்குவிப்பதுடன் தரம் வாய்ந்த பொருட்களைக் கூடுதலான அளவு உற்பத்தி செய்யவும் முடியும்.

தமிழகத்தில் பனைத்தொழில் செய்பவர்களின் எதிர்கால நலனில் கூடுதலான கவனம் செலுத்தப்பட்டு வருவது எனக்கு மிகவும் நிம்மதியாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தது. விபத்துநிதித் திட்டம் மூலம் சிறுவிபத்து, பெருவிபத்து, மரணம் ஆகியவற்றிற்கு இழப்பீடுகள் வழங்கப்பட்டுவருகின்றன. ஜனதா இன்ஸ்யூரன்ஸ் திட்டம் மரம் ஏறுபவர்களின் குடும்பங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்றது. இத்திட்டத்தின் மூலம் மரம் ஏறுபவர்கள் மரண விபத்துக்குள்ளாகும் போது அவர்களுடைய குடும்பத்திற்கு இருபதினாயிரம் ரூபா வரையும் வழங்கப்படுகின்றது. இதற்காக மாநில இணையத்திற்குச் "சபாஷ்" போடலாம்.

இவ்விடயங்களைப் பொறுத்த வரையில் எமது தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் பெரும் சாதனைகளையே புரிந்து உள்ளன. (தொடரும்)

## சைபீரியாவின் வரலாறு கூறும் மியூசியம்

சைபீரியாவின் புராதன நகரமான ஸாவிஸெஸர்ஸ்க்கில் மரத்தினால் மட்டும் கட்டப்பட்ட தேவாலயம் ஒன்று உள்ளது. வடக்கு ரஷ்ய கட்டடக் கலையை விளக்கும் அற்புதப் படைப்புகளில் இதுவும் ஒன்றாகும். தற்போது நோவிசிபிர்ஸ்க் நகரில் உள்ள 'கிராமியக் கட்டிடக் கலை மியூசியத்துக்கு' இந்த அபூர்வ தேவாலயம் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

மரத்தினால் அமைந்த இந்தத் தேவாலயம் பகுதி பகுதியாகப் பிரிக்கப்பட்டு கப்பல் மூலமாகவும் நோவிசிபிர்ஸ்க் நகருக்கு எடுத்துக் கொண்டு வரப்பட்டு மீண்டும் இணைக்கப்பட்டுள்ளது.

இக் கிராமியக் கட்டிடக் கலை மியூசியத்தில்; சைபீரியாவின் வரலாற்றினைக் கற்காலத்தில் இருந்து கடந்த நூற்றாண்டின் மத்தியப் பகுதி வரை சித்தரிக்கும் கட்டிடக் கலைச் சின்னங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

புராதன மரக் கோட்டைகளின் காவற் கோபுரங்கள், பைகால் ஏரியிலிருந்து செல்லும் புராதனக் கால்வாயில் அமைக்கப்பட்டிருந்த தண்ணீர்க் குழாய்கள், மட்பாண்டங்கள், மரப்பாத்திரங்கள், ஆடைகள், காலணிகள், மரச்சிற்பங்கள் ஆகியவையும் அந்த மியூசியத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

– அ. தர்ஷன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலதும் பத்தும்

## உணவினைப் பாதுகாக்கும் "மொனோ கிளிசரைட்" படலம்

— அ. தர்ஷன் —

உணவுப் பொருட்களைப் பேணிப் பாதுகாப்பதற்கான படலம் ஒன்றை சோவியத்தின் கஜாக்ஸ்தான் இரசாயன ஆராய்ச்சிக் கழகம் உருவாக்கியுள்ளது. மொனோ கிளிசரைடுகளால் ஆன இந்தப் பாதுகாப்புப் படலம், மனித உடலுக்குத் தீங்கற்றது. இதற்கு ருசியோ, நிறமோ, மணமோ கிடையாது. இந்தப் பாதுகாப்பு "மூடி" யினால் இறைச்சி வீணாவதைத் தடுக்கலாம். இறைச்சியின் தரம் கெட்டுப் போகாமல் நெடுங்காலம் பாதுகாக்கலாம். 'ஜாம்புல்' இறைச்சி அடைக்கும் ஆலையில், 300 டன் இறைச்சி மீது இப் பாதுகாப்புப் படலம் பரிசோதிக்கப் பெற்று, நல்ல பயனைத் தந்துள்ளது. இதனைத் தொடர்ந்து தானியங்களையும் பழங்களையும் இப் படலத்தால் பாதுகாக்க முடியும் என்பதும் வெள்ளைப் பூண்டை ஓராண்டுக்காலம் சிறந்த முறையில் பாதுகாக்க முடியும் என்பதும் உறுதியாகியுள்ளது.

## சோவியத் மொழியில் இராமாயணமும் மகாபாரதமும்

இந்திய இதிகாசங்களான இராமாயணமும் மகாபாரதமும் அஸர்பைஜானிய மொழியில் வெளிவர இருக்கின்றன. "உலக இலக்கிய நூல்கள் வரிசை' என்னும் தலைப்பில் 100 தொகுப்புக்களில் வெளிவர இருக்கும் நூல் வரிசையில் இந்த இரண்டு இதிகாசங்களும் அடங்கும். சோவியத் ஒன்றியத்தின் அஸர்பைஜான் குடியரசின் அரசுப் பதிப்பகம் உலக இலக்கிய நூல்கள் வரிசையை வெளியிடவுள்ளது "சமாதானம் மற்றும் நட்புறவுக்கு 'மகாபாரதம்' விடுக்கும் அறைகூவல் இன்றைய உலகிற்கும் பொருத்தமுடையதாக இருக்கிறது. உட்பகையால் ஒருவருக்கொருவர் யுத்தத்தில் ஈடுபட்டு அழிந்தொழியும் வரலாற்றைச் சித்தரிக்கும் 'மகாபாரதம்' நமது காலத்தில் மனித நாகரிகத்தையே அழித்தொழிக்க வல்ல அணு ஆயுதங்களைக் கைவிட மறுப்போருக்கு ஒரு எச்சரிக்கையாக விளங்குகிறது" என்று அஸர்பைஜான் அரசுப் பதிப்பகத்தின் துணைத் தலைவர் அல்தார் கான்பாபாயேவ் குறிப்பிட்டுள்ளார் மற்றும் இந்தியப் பேரிலக்கியங்கள், ரவீந்திரநாத் தாகூர், முல்க்ராஜ் ஆனந்த், மீர் அம்மான், ஆதிப் மிர்ஸா போன்ற புகழ் பெற்ற இந்தியக் கவிஞர்கள், எழுத்தாளர்களின் படைப்புக்களும் இந்த நூல் வரிசையில் வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

அஸர்பைஜானுக்கும் இந்தியாவுக்கும் உள்ள உறவுகள் வரலாற்றுப் பழைமை பெற்றவை. மத்திய காலத்தைச் சேர்ந்த இந்திய வியாபாரிகள். அஸர்மைஜானுக்கு குறிப்பாக பாகூர் நகருக்கு வணிக நிமித்தம் அடிக்கடி விஜயம் செய்துள்ளனர். பல நூற்றாண்டுகளுக்கு முன் பாகூ நகரில் இந்திய வியாபாரிகள் தங்கியிருந்த இரண்டு புராதன விடுதிகள் இன்றும் [illegible] காட்சி அளிக்கின்றமை [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பனை அபிவிருத்திச் சபை

ஸ்வர்ணம் பப்ளிசிரீஸ், ஸரேசன் வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org